www.padippakam.com

50 சதங்கள்

SECOND CLASS MAIL REGISTRATION NO:8435

# தாயகம்

"உண்மையைத் தேடி"

12 தை 1990

ISSN 0847-3749

உண்மை:1 | ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவன வெளியீடு | தேடல்:27

## ஈ.பி.ஆர்.எல்.எஃவ் மாகாணசபை உறுப்பினர் சுட்டுக்கொலை

9.1 கொழும்பு

வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினரான தவராசா தம்பிராசா புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த புதன் கிழமை இவரது கார் மீது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு மெய்ப் பாதுகாவலர்களும் கொல்லப பட்டிருக்கிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப் இன் மாகாண சபை உறுப்பினரான இவர் திருக்கோண மலையில் நடைபெற்ற தாக்குதலில் இவரும் இவருடைய மெய்ப்பா துகாவலர்களும் ஸ்தலத்திலேயே உயிர் துறந்தார்கள். இவருடன் சென்ற மற்ற மெய்ப்பாதுகாவலர் கடுங் காயங்களுக்கு உள்ளானுர். இவரது இறுதிக் கிரியைகள் வியாழக் கிழமை நடைபெறும் எனத் தெரியவருகிறது. இச்சம்பவத்தின் பின் எல்லா வியாபார நிலையங்களும் மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டதாக வெளிநாட்டு நிருபர்களுக்கு தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. இந்திய இராணுவத் தினர் தாக்குதல் நடத்தியவர்கள் மீது தேடுதல் வேட்டையை நடத்தி வருகிறார்கள்.

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்

## "தாயகம்" "தடைமிரட்டல்" "பயமுறுத்தல்"

"தாயகம்" பத்திரிகையைத் தடை செய்வதாக இங்குள்ள சில "தாயகம்" பத்திரிகை விற்பனை நிலையங்களில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தங்கள் அமைப்புகளுக்கு எதிராக தாயகம் செய்தி வெளியிடுவதால், மேலிடத்தில் இருந்து வந்த உத்தரவையொட்டி தாயகத்தை தடை செய்ய வேண்டி ஏற்பட்டது என்றும் அவர்களிடம் கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மொன்றியலிலும் இங்கும் சில விற்பனை நிலையங்களில் இப்படி வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தன. தாயகம் ஆசிரியரிடமும் தங்களை புலிகளின் ஆதரவாளர்கள், விசுவாசிகள் என்று கூறிக் கொண்ட நண்பர்கள் வீதியில் வைத்து இதே கருத்தைத் வலியுறுத்தினுர்கள். மீண்டும் எங்கள் கருத்தை வலியுறுத்த விரும்புகிறோம். தாயகம் எந்த அமைப்புக்கோ தனிநபருக்கோ விரோதமான பத்திரிகை அல்ல. மக்களுக்கு எதிரான எந்த ஒரு அராஜகத்தையும் நாங்கள் மௌனமாக அங்கீகரிக்க முடியாது. மனிதனுக்கான அடிப்படை சுதந்திரங்கள் மதிக்கப்பட வேண்டும், கருத்துகளுக்கு அனைவரும் முகம் கொடுத்துப் பழக வேண்டும். குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக நாங்கள் பத்திரிகை நடத்தவில்லை. தவறுகள் திருத்தப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம். ஈழத்தில் நடைபெறும் செயற்பாடுகள் போல் இங்கும் இடம் பெறுவதை நாங்கள் விரும்பவில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் எங்கள் வாசகர்களாக இருக்கும் போது ஒரு சிலரின் கருத்துகளுக்காக நாங்கள் பத்திரிகையை நிறுத்த முடியாது. நாங்கள் செய்திகளை வெளியிடுகிறோம். எங்கள் கருத்துகளுக்கு முரண்பாடானவர்கள் எழுதி அனுப்பும்போது நாங்கள் அவற்றையும் பிரசுரிக்கிறோம். அவர்களும் தங்கள் கருத்துக்களை மக்கள் முன் வைத்தால் மக்களே தீர்ப்பளிக்கட்டும். இப்படி ஒரு சுதந்திரமான நாட்டில் எங்கள் கருத்துகளை வெளியிடுவதற்கு தடை விதிக்க முனைந்த இவர்களையிட்டு நாங்கள் மனம் வருந்துகிறோம்: எது எப்படியிருப்பினும் எந்த நோக்கத்துக்காக தொடங்கப்பட்டதோ அதே நடுநிலையில் தொடர்ந்தும் எங்கள் பத்திரிகையை கொண்டு நடத்துவோம்.

கருத்துகளுக்கு மதிப்பளிக்கிறோம். ஆனுல் கருத்துகளைத் திணிக்க முற்பட வேண்டாம்.

இது பற்றிய வாசகர் கருத்துக்களை தாயகம் எதிர்பார்க்கிறது.

<u>விவாதம் தொடர்கிறது</u>

## அரசுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்


11.1 கொழும்பு

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ளன. ஜனுதிபதிக்கு எதிராக கொண்டு வரப்பட்ட இந்த நம்பிகையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் இன்று நடைபெற்றது. அமைதியை நிலைநாட்டத் தவறியதற்காககவும் அரச சார்பு வன்செயல் குழுக்களைக் கட்டுப்படுத்த தவறியதாலும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மேற கொள்ளப்பட்டது. சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவினுல் இந்த தீர்மானம் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. பாராளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களில் ஐக்கிய தேசிய கட்சி 124 ஆசனங்களைப் பெற்றுள்ளது. சுதந்திரக் கட்சியும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்த மூன்று கட்சிகளுக்கும் மொத்தம் 84 ஆசனங்கள் உண்டு.

அந்த தீர்மானத்தில் பொருளாதாரத்தை சரியான முறையில் நிர்வகிக்கத் தவறியதாகவும் ஊழலை ஒழிக்க முயற்சி எடுக்காததாலும் அரசியல் எதிரிகளுக்கு பாரபட்சம் காட்டியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## சிறைகளில் தாய்களுடன் பிள்ளைகளும் பாதிப்பு

இலங்கையில் இன்று இளம் பெண்கள் சிறையில் அடைக்கப்படும் போது அவர்களுடன் அவர்களுடைய பிள்ளைகளும் சேர்ந்து அடைக்கப்படுகிறார்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதுபற்றி நீதி அமைச்சரின் செயலாளர் கருத்து தெரிவித்த போது இது பற்றி தாம் அதிர்ச்சி அடைந்ததாக குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி கருத்து தெரிவித்த சட்டத்தரணி ஒருவர் தாய்மார் சிறைத் தண்டனை அனுபவிக்கும் போது குழந்தைகளை பாதுகாப்பதற்கான சட்டங்கள் இல்லை எனக் கூறியிருக்கிறார். தாய் சிறையில் இருக்கும் போது குழந்தைகளை பராமரிக்க யாரும் இல்லாவிட்டாலும் சிறு பராயத்தவராக இருப்பதாலும் அந்த குழந்தைகளை தாய்மாருடனேயே காவலில் வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.



1974 தை பத்தாம் திகதி நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் அநியாயமாக நிகழ்ந்த உயிர்ப்பலிகளை நினைவு கூருகிறோம்.

5497A, விக்டோரியா அவனியூ #222
மொன்றியால்
மெற்றோ: கோற்சென் கத்தரீன்

தேடகம்
(நூலகம்)

566, பாராளுமன்ற வீதி
டொரொன்டோ
வெலெஸ்லி/பார்லிமென்ற்

Thayagam: A Tamil weekly published by Georgicka communications

படிப்பகம்

www.padippakam.com



# சுதந்திரக் குரல்.

அல்பேனிய நாய் ஒன்று போலந்துக்கு வந்தது. போலந்தில் நாய்கள் எல்லாம் இறைச்சிக்காக மைல்கணக்கில் கியுவில் நின்றன. நன்றாக கொழுத்திருந்த அல்பேனிய நாயைப் பார்த்து போலந்து நாய்கள் ஆச்சரியம் அடைந்தன. மெதுவாக போலந்து நாய் ஒன்று அல்பேனிய நாயுடன் நட்புறவு வைத்துக் கொள்ள முயன்றது. அருகே சென்று மெதுவாக சிரித்துக் கொண்டது. ஹை! குசலத்தின் பின் "ஏனப்பா நீ இஞ்ச வந்தனீ? உனக்கு அங்க எல்லாம் கிடைக்குது. நேரத்துக்கு சாப்பாடு, வீடு கிடைக்கிறதுக்கு எங்களைப் போல வருசக்கணக்கில் காவல் இருக்கத் தேவையில்லை. இஞ்ச பார் கால் இறுத்தல் இறைச்சிக்கு நாங்கள் இரண்டு நாளாய் காவல் இருக்கிறம். " தன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட போலந்து நாய் கேட்டது "பிறகேனப்பா இஞ்ச வந்தனீ?" அல்பேனிய நாய் பெருமிதத்துடன் சொன்னது "குலைக்கத்தான்!"

சமீப காலங்களில் பல இலக்கிய சஞ்சிகைகள் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் பரவலாக வெளிவருகின்றன. சமீபத்திய விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சி இந்த முயற்சிகளுக்கு பெருமளவில் கைகொடுத்திருக்கின்றன. முன்பு சில இலக்கியவாதிகளுக்கும் புத்திஜீவிகளுக்கும் மட்டும் சொந்தமாயிருந்த கலை இலக்கிய முயற்சிகள் தற்போது எங்கும் நிறைந்து விட்டன. இலக்கியவாதிகள் தங்களை மற்ற வாசகர்களிடம் இருந்து தனிமைப்படுத்தி தங்களுக்கு பிடித்தவை என்று சிலவற்றை வகைப்படுத்தியதால் மற்ற வாசகர்களும் இந்த சமாச்சாரங்களில் இருந்து அன்னியப்பட்டு நல்ல இலக்கியக் கருத்துக்கள் சாதாரண மக்களிடம் சென்றடையவில்லை. ஒரு சில இலக்கியவாதிகள் சேர்ந்து கூடி விமர்சனங்கள் நடத்தி தங்களை மற்ற சாதாரண மக்களை விட தாங்களே மேலானவர்கள் என்று காட்டிக் கொண்டார்களே அன்றி சாதாரண மக்களை தங்கள் அளவுக்கு, வித்தியாசமான கலை அம்சங்களை ரசிக்கும் அளவுக்கு வளர்க்க முயற்சிக்கவில்லை.

இதனால் மக்களும் சிந்தனாபூர்வமாக வளர்ச்சியடையவும் இல்லை. இவர்களின் படைப்புகளும் மக்களைச் சென்றடையவில்லை. தொடர்ந்தும் மக்களை இந்த கலைகள் பற்றி ரசனை இல்லாதவர்கள் என்றும் தங்களை விசேட கலாரசிகர்களாகவும் காட்டிக் கொண்டும் இந்த கலாவிமர்சகர்கள் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இலங்கையில் இன்று பல புதிய சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் சிறு சிறு குழுக்களால் வெளியிடப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவு விற்பனையையே கொண்டிருக்கின்றன. இவற்றின் விலையும் சாதாரண மக்களால் வாங்கிப் படிக்க முடியாத நிலையில் இருப்பதால் பழைய குருடி கதையாகத் தான் தொடரும். இருந்தாலும் இந்த துடிப்பு பாராட்டப்பட வேண்டிய ஒன்று. பல புரட்சி இலக்கியங்கள் இந்த போராட்டத்தின் பின் வெளிவந்தாலும் அவை மக்கள் மத்தியில் சென்றடைய சில துப்பாக்கிகள் தடையாக இருந்திருக்கின்றன.

இந்த சஞ்சிகைகள் கூட வெறும் இலக்கிய சஞ்சிகைகளாகத் தான் வெளிவருகின்றன. முன்பின் தெரியாத வெளிநாட்டு படைப்பாளிகள் பற்றி அறிமுகம் செய்யாமல் எடுத்த எடுப்பிலேயே அவர்களைப் பற்றிய ஆய்வுகளை எழுதி தமது தமது மேதாவித்தனத்தை வெளிப்படுத்தும் நிலை தொடர்வது போலவே தெரிகிறது. இந்த இலக்கிய முயற்சிகளை முற்றுமுழுதாக பயனற்றவை என்று தூக்கி எறிந்து விட முடியாது. ஒரு குறிப்பிட்ட குழுவினரின் இலக்கிய வேட்கையை இந்த முயற்சிகள் தீர்த்து வைப்பது என்பது உண்மைதான். இருந்தாலும் மக்களிடம் இருந்து அன்னியப்பட்டு மக்களின் ரசனையை வளர்ப்பதற்கான முயற்சிகள் தான் நடைபெறவில்லைப் போல் தோன்றுகிறது. வெறும் இலக்கியத்தில் மட்டுமே இருந்து, அரசியல் பற்றிய கருத்துக்களை துணிந்து கூறக் கூடிய நிலையில் நாட்டுநிலைமைகள் இல்லாததால், இந்த முயற்சிகள் எந்த வித மாற்றத்தையும் சமூகத்தில் ஏற்படுத்தும் என நம்பமுடியவில்லை. பல அரசியல் ரீதியில் சர்ச்சைகளை ஏற்படுத்தக் கூடிய பல கருத்துக்கள் கவிதை வடிவமாக வெளிவந்தாலும் அந்த கருத்துகள் உரிய விதத்தில் மக்களுக்கு சேராததால் அதன் பாதிப்புகள் எதுவும் சமூகத்தில் நிகழவில்லை. இதனால் இந்த படைப்பாளிகளின் தலைகளும் தப்பிப் பிழைத்திருக்கின்றன. அரசியல் ரீதியாக கருத்துக்களைச் சொல்பவர்களும் எமகண்டம் பாடிய புலவர்கள் போல் தங்கள் கருத்துக்களை சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம். ஆயுதமுனைக் கருத்துத் திணிப்பினால் பல சுதந்திர உணர்வு கொண்ட படைப்பாளிகள் மௌனமாக்கப்பட்டிருக்கிறார்கள்.

"எங்களைப் பற்றி மோசமாக எழுதாதவரை நீ எதையும் எழுதலாம்" என்ற கருத்துச் சுதந்திரம் மட்டும் இந்த படைப்பாளிகளுக்கு பெருமனதுடன் வழங்கப்பட்டிருக்கிறது. "மொட்டைகளும் குட்டைகளும் மூட்டி விட்ட பைசாசம்" என்ற வரிகள் இந்த கோஷ்டிகளின் கண்களின் படாமல் விட்டது போலவே மக்களின் கண்ணிலும் படவில்லை. இதனால் எழுதியவருக்கு அஞ்சலி செலுத்த வேண்டிய தேவையும் ஏற்படவில்லை. இந்த அடிப்படைக் கருத்துச் சுதந்திரங்கள் பறிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் "கொங்கோக் காடுகளில் நாட்டார் பாடல்கள்" என்று இலக்கியக் கட்டுரைகள் எழுதுவது மிகவும் பாதுகாப்பான ராஜதந்திர நடவடிக்கையே.

ஆனால் இந்த இலக்கிய முயற்சிகளால் சமூக விழிப்புணர்வைக் கொண்டு வரமுடியுமா என்பது சந்தேகம் தான். மக்கள் அழிந்த நிலையில் இலக்கியங்களைப் பாதுகாப்பதற்கான தேவை எப்படி எழும்? இலக்கியங்களைப் பாதுகாக்க மக்கள் உயிரோடு வாழ வேண்டும். மக்கள் அழிந்த நிலையில் எங்கள் போராட்டங்கள் பற்றி பேசாமல் "சங்க காலத்தில் அடக்குமுறைக்கு எதிரான மக்கள் போராட்டம்" பற்றி பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டால் அதன் அர்த்தம் என்ன? மக்களின் இன்றைய தேவை இன்றைய வாழ்வுக்கான போராட்டம். அதிலிருந்து தப்பிப் பிழைக்க மக்கள் அல்லலபடும் போது வெறும் இலக்கியத்துக்கான அவசியம் உண்டா?

இலங்கையின் இலக்கிய முயற்சிகள் ஒருபுறம் இருக்க இன்று வெளிநாடுகளில் இருப்போர் (புலம் பெயர்ந்தோர்!) நடத்தும் இலக்கிய முயற்சிகள் நிறைந்து விட்டன. சுவிட்சலாந்திலிருந்து மனிதம், ஜேர்மனியில் தூண்டில், நெதர்லாந்தில் இருந்து அஆஇ, நோர்வேயில் இருந்து சுவடுகள், பிரான்சில் இருந்து தேடல் என்று பல புதிய துடிப்பான முயற்சிகள் தோன்றியிருக்கின்றன. ஆரம்பத்தில் இவ்வாறான முயற்சிகள் எப்போதுமே சில பிரதிகளுடன் உயிரை மாய்த்துக் கொள்ளும் போது இந்த முயற்சிகள் எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தங்கள் பாதையிலே நடை போட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் பிரசார இலக்கியங்கள் நிறைந்திருந்த போதிலும் பின்பு ஒரு உயிர்த்துடிப்புக் கொண்ட எழுச்சி ஒன்று தோன்றி இந்த பிரசார இலக்கியங்களை(?) தடம் புரள வைத்து விட்டன. இது வளர்ச்சியா? தேக்கமா? என்பது ஒரு புறம் இருக்க இதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராயும் போது தற்போதைய தொழில் நுட்ப வளர்ச்சியே இதன் அடிப்படைக் காரணம் எனலாம். முன்பு பலர் சம்பந்தப்பட்ட ஒரு வெளியீடு என்பது இன்று ஒரு தனிமனிதனாலேயே சாத்தியமாகக்கூடிய அளவிற்கு தொழில் நுட்பம் வளர்ந்திருக்கிறது. வெறும் தொழில் நுட்ப வளர்ச்சி மட்டும் இதற்கு காரணம் இல்லை. சிந்தனைப் புரட்சி ஒன்று தோன்றுவதற்கு இந்த மேல்நாடுகள் களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றன.

மேல்நாடுகளின் சட்டவரம்புகளுக்குள் நாங்கள் எங்கள் எங்கள் சிந்தனை ஓட்டத்தை தங்குதடையின்றி விடக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இந்த முயற்சிகள் ஏன் வெறும் இலக்கிய விடயங்களுடன் மட்டும் அன்றி அரசியலில் வெறும் சர்ச்சைக்குரிய விடயங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன? அல்பேனிய நாய்களுக்கு நடந்த கதிபோல் "எல்லாமே குரைப்பதற்காகத்தான்". சொந்த நாட்டில் இல்லாத இந்த கருத்துச் சுதந்திரங்கள் எல்லாம் கடல் கடந்த பின்பும் எங்களுக்கு கிடைத்திருக்கின்றன. இந்த இலக்கியங்கள் எல்லாம் பிரச்சனைகளை நேரடியாக எழுத முயற்சிக்கின்றன. வெறுமனே உருவகக் கதைகள் மூலமாக மக்களுக்குப் புரியாத விதத்தில் தங்கள் கருத்துக்களைச் சொல்லாமல் அப்பட்டமாகவே தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி வருகின்றன.

தாய்நாட்டிலே தங்களது சுதந்திரங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை தகர்த்தெறிவதற்காக இன்னொரு நாட்டிலே இருந்து போராட வேண்டிய சூழ்நிலை இன்று தோன்றியிருக்கிறது. இந்த மேற்சொன்ன சஞ்சிகைகளை நோக்கும் போது அவை எல்லாம் முக்கியமாக தமிழ் மக்களுக்கு எதிராக தமிழ்க் குழுக்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களைக் கண்டித்து வருகின்றன. இந்த துணிச்சல் ஈழத்தில் தற்போதைய நிலையில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. இந்த குழுக்களுக்கு எதிரான தங்கள் உணர்வுகளை இந்த சஞ்சிகைகளை வாங்குவதன் மூலம் மக்கள் தீர்த்துக் கொள்கிறார்கள் என நண்பர் ஒருவர் இதை வர்ணித்திருந்தார்.

ஈழத்திலே மக்கள் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கு படும் அவல நிலை எங்களுக்குப் புரியாமல் இல்லை. நாங்கள் எங்களுக்கு இங்கே கிடைத்த இந்த சுதந்திரத்தை பயன்படுத்த முனைகின்றோம். பத்திரிகைகளின் குரல்வளை நெரிக்கப்பட்ட நிலை போய் இன்று இங்கும் இந்த பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயக உரிமைகள் எம்மவர்களால் மறுக்கப்படும் நிலை தொடருகிறது போல் தெரிகிறது. இந்த நிலை தொடர வேண்டுமா? இவ்வாறான நிலை இங்கே இருந்தால் நாங்கள் அங்கே சென்று மௌனமாக இருக்கவே விரும்புகிறோம்.

வெளிநாடுகளில் இருந்தும் ஈழத்தில் இருந்தும் வரும் புதிய முயற்சிகள் பற்றிய தொடர் ஒன்று தாயகத்தில் வெளிவரும். அதில் ஒவ்வொரு வாரமும் நாங்கள் ஒவ்வோர் முயற்சிகள் பற்றி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த முயற்சிக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

## வாழ்க்கை

இரத்தப்பசியை
இரைப்பையில் நிரப்பி
இரைக்காய் அலைகின்ற
இந்திய அரசே!

நீ எண்ண வேண்டாம்
எங்களுடன்
சமரசங்கள் சாத்தியம் என்று.

மனிதத்தை நீ குதறியதும்
மனித உடல்களை
நாய்கள் கடித்ததும்
எங்களால்
மறக்கப்படவில்லை
உன்னை
மன்னித்து விட.

நீ
தொற்றுநோய்களையும்
வற்றிய வயிறுகளையும்
சொந்தங்களைப் பிரிந்த
துயரங்களைத் தந்தபின்னும்

நாங்கள்
துவண்டு விடவில்லை
எங்கள் வாழ்க்கையை விற்க

பாறையின் விளிம்பில்
பற்றிய நெருப்பாய்
பாதைகள் எரியினும்
பாதம் பதிப்போம்.

தோழமை உயிர்ப்பின்
கல்லறைப் பதிவுகள்
கண்களில் எழுதும்
கவிதைகளைப் படித்தபடி.

ஆம்!
வாழ்க்கை எமது பிறப்புரிமை
அதற்காக போராடுவதும் கூட.

_கௌரி_

## புதிய பாதை

கண்தனை எடுத்தவன்
கண்ணியம் தனை நம்பி
மாகாண சபையாக....?

உதவியென கரம்தனை நீட்டி
குரல்வளைதனை நெரிக்கும்
அந்நிய நாட்டிற்காக....
தமிழ் ஈழமா...?

ஈழ மண்ணும்
ஈழ தமிழரும்
விடுதலை காணுகின்ற
புதிய பாதையா?

நண்பர்களே
நீங்கள் பதித்த
காலடி சுவடுகளில்
நசிந்து மடிந்த
உயிர்களை
நீண்ட தந்திக்
கம்பங்களை
சிதறிய
இரத்தத்துளிகளை
இந்திய இலங்கை
இராணுவத்தால்
அழிக்கப்பட்டவர்களை..

கற்பிழந்த கன்னியர்களை
பொட்டிழந்த பெண்களை
சிதறிய குடும்பங்களை
சிந்திய கண்ணீரினை
இத்தனைக்கு மேலான
உங்கள்
அளப்பரிய தியாகங்களை..

ஓர் நிமிடம்
இல்லை
ஓர் கணம்
உங்கள் மனத்திரையில்
புதிய பாதையினை
நோக்கி
உங்கள் காலடிகளை
பதித்து விடுங்கள்

மனிதன்

## ஒரு மாறுதலுக்காய்...

காட்டுநாய்களெல்லாம்
ஒரு மாறுதலுக்காய்
பட்டணம் வந்தன
படம் பார்த்தன.,

மிட்டாய் கடைகள்
மின்சார விளக்குகள்
விதவிதமான
வண்ணத்துணிகள்
பதமான உணவு
பலவித சொகுசு
இரவில் நகரம்
இருப்பதைப் பார்த்து
கடிதம் எழுதி
களைத்துப் போயின.

களைத்தபின் காட்டில்
கவனம் செலுத்தின
உழைத்துழைத்து அனுப்பியும்
உருப்படடபாடில்லை
வேலை இல்லையென்றால்
விடிந்ததும் வீதியில்....

பட்டணத்திலே
பலநாள் இருந்ததால்
குரைப்பது மறந்தன
கூடிக்கூடிக்
குரைப்பதற்கேங்கின.
காட்டிற் குரைக்காத
கடுவன்களெல்லாம்
பட்டணத்திலே குரைத்தன!

எல்லாமே ஒரு
மாறுதலுக்காய்.......!

_ஆனந்த் பிரசாத்_

## ஒரே ஒரு முறை....

என் கிரவஞ்சப் பறவையே!
கதிர்விழிக்குமுன்னே
கண் விழித்து
உன் காலை விடியலுக்காக
பூபாளம் பாடும்
இந்த முகமறியாதவனின்
குரல் இன்று
தனிமையின் மௌனத்தில்
கலங்கிக் கரைகிறதே!
இளவேனில் வசந்தத்தின்
சலசலப்பில்
இந்த ஏழைப்பாடகனின்
உதய கீதம்
உனக்கு
கேட்கப் போவதில்லை

என் வசந்தத்தின் கோகிலமே!
உன் அழகிய
சிறகுகளை விரித்து
நீ
நீந்தி வந்த
அவன் இதய வானம்
இன்று
உன் நினைவு மின்னலில்
அக்கினிப் பிளம்பாகி
அனல் வீசுகிறதே!
அதன் உஷ்ணம்
உனதுயிரைத் தொடவில்லையா?
உன் எண்ணப் பூக்கள்
நட்சத்திரங்களாகி
கண் சிமிட்ட
இலையுயிர்ந்த
மரங்களின் மடியில்
நிழல் தேடி
இந்த தெருப்பாடகனின்
பார்வையில் திரைவிழ முன்
ஒரு முறை
ஒரே முறை
வானத்தை விட்டிறங்கி
பூமிக்கு
வரமாட்டாயா?

அ.கந்தசாமி

# கவிக்கோலம்

## உள உறவின் உணர்வுகள்

கண்ணே
நீ அழைக்கவில்லைத் தான்
ஆனால் என்னால்
என் கண்களை குத்தமுடியாது
நீ என்னைத் தேடாமல் இருக்கலாம்
ஆனால் என்னால்
என் அன்பைப் புதைக்கமுடியாது
நீ என்னை மறக்க நினைக்கலாம்
ஆனால் என்னால்
என் வசந்தத்தை தொலைக்க முடியாது
நீ இன்று வரை எனக்கு
சொந்தமில்லைத் தான்
உன்
உடலோ உயிரோ
எனக்கு எட்டவில்லைத்தான்
ஆனால்
உனது அன்பை மட்டும்
கொடுத்து விட்டு- இன்று
அதை ஏன் மீளப்பெற
எண்ணுகிறாய்?
இது நான் உனக்குப்
காவியமல்ல
உன் வார்த்தைகள்
என் இதயத்தில் தைத்த
துவாரங்களை
ஆற்ற நினைக்கிறேன்
உன்னால்
என்னை விட்டு விலக முடியும்
என்னை மறக்கவும் முடியும்- ஆனால்
இவை எனக்கும் உனக்கும்
உள்ள தூரமல்ல
எனக்கும் என் வாழ்வுக்கும் உள்ள
இடைவெளியே தான்
என் கண்களில் இருந்து
நீ மறையலாம்!
என் அருகினிலிருந்து
நீ விலகலாம்!!
என் அரவணைப்பிலிருந்து
நீ விடுபடலாம்!!!
ஆனால்
ஒன்றை மட்டும் நீ
ஞாபகத்தில் வைத்துக் கொள்
என் அடிமனதில்
அன்புக் கணை கொண்டு
அறைந்துள்ள உனது
அன்பு இதயத்தை மட்டும்
உன்னால்
என்னிடமிருந்து
மீட்க முடியாது!

_பவிரா_

## பாத காணிக்கை

விழியே உனக்காக உயிர் வாழ்கிறேன்
இமை போல உனைக் காத்திடத் தினம்
வாடுகின்றேன்.
காதோரம் கதை சொன்ன காலங்கள் மறந்து
கல்லாக்கி விட்டாயா இதயத்தை எனைத் துறந்து?

கண்களால் கவி சொன்ன நீ- அதில்
கனல்தனைப் பறக்க வைப்பது நியாயமா இன்று?
உன்
சந்தேகக் குண்டுகளால் உன் மனமே
சல்லடை சல்லடையாகி விட்டதோ இன்று?

கடல்கரையோரங்களில் அன்று நாம்
கட்டிய காதல் கோட்டைகள் போலாகி விட்டதே!
என்
மனதில் நீ அன்று போட்ட கோலமெல்லாம்
கடல் நீரில் போட்ட கோலமாகி விட்டதே இன்று!

நீயின்றிப் போனாலென்ன- உன்
நினைவொன்றை போதும்- அந்த
தீராத சோகத்திலேயும் தினம் தினம்
சுகத்தினைக் காண்கிறேன்
எப்படி?
ஆடும் மனதில் தினம் உன் நினைவு
பாடும் கவியில் நீயே சந்தம்
தேடும் அழகோ வெண்மதி போன்ற
உன் எழில்
தினம் வாடும் உள்ளம்
உனை நாடும் காதலினால்
பேசும் மௌனம்
மௌனத்தில் எல்லையில்
உருவாகும் என்னுயிர்க் கவிதைகள்
என்றும் உன் பாதத்திற்கு சமர்ப்பணம்

_கந்தையா ஐங்கரன்_



படிப்பகம்

www.padippakam.com

## புலிகளின் மீதான கசப்புணர்வு நீக்கப்பட வேண்டும்

பாலகுமார்

இந்திய அரசு புலிகளை வெளியே வருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் ஒரு குழுவுக்கு எதிராக மற்ற குழுவை திருப்ப முயற்சிக்கக் கூடாது என்றும் ஈரோஸ் தலைவர் பாலகுமார் கருத்துத் தெரிவித்திருக்கிறார். கடந்த இரண்டு வருடங்களாக கடும் சண்டையும் உயிரிழப்பும் நேர்ந்திருக்கிறது, பிரச்சனைகளை தன்பாட்டிலேயே தீர்வு காண விட வேண்டும், மற்ற குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி புலிகளை அழிக்க இந்தியா முயற்சிக்கக் கூடாது என்று அவர் பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார். புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தமிழ் மக்கள் பணயக் கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். தவறுகள் இருந்தாலும் தமிழ் தேசியவாதத்துக்கான சக்தியாக வளர்ந்திருக்கிறது, அதே போல் அவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். புலிகளைப் பொறுத்தவரை இவர்களே வடக்கு கிழக்கில் சக்தி வாய்ந்த அமைப்பு என்றும் இந்தியா அந்த நிலையை மாற்ற முயற்சிக்க கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இயக்கங்கள் பற்றி கருத்து தெரிவித்த அவர் அவர்கள் எந்த விதத்திலும் ஒற்றுமையாக வரமாட்டார்கள் என்றும் யாராலும் இவர்களை ஒற்றுமையாக்க முடியாது என்று கூறினார். இலங்கைப் பிரச்சனையை தூய உள்ளத்துடன் அணுக வேண்டும் எனவும் ஒப்பந்தத்துக்கு பின்பான நிலை பற்றி இந்தியா ஆராய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ரஞ்சனின் கருத்திற்கு இந்திய அதிகாரிகள் ஆட்சேபம்

இந்திய அதிகாரிகளைப் பற்றி ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்த கருத்துகளையிட்டு இந்திய அரசியல் அதிகாரிகள் பலத்த ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள். இவரது கருத்துக்கள் இந்தியாவுக்கு அவமானம் என்று அவர்கள் கடும் ஆட்சேபம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் உறுப்பினரான ஆனந்த் சர்மா பாராளுமன்றத்தில்
இந்தியா இந்த பொறுப்பற்ற முறையிலும் ஆத்திரமூட்டும் வகையிலும் தெரிவிக்கப்பட்ட கருத்துகளையிட்டு ஏன் இன்னமும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்று கேட்டார். இவரது கருத்துகளுக்கு மற்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் ஜனதா உறுப்பினர் சுப்பிரமணியம் சுவாமியும் ஆதரவு தெரிவித்தார்கள்.

ஆனந்த் சர்மா மேலும் பேசுகையில் உண்மையான நிலையையும் வெளிநாடுகளின் பயமுறுத்தலையும் உணர்ந்து கொள்ளாமல் வி.பி.சிங் முன்னைய அரசின் கொள்கைகளை கண்டிப்பதற்கு முன்னிற்கிறார் என்பதாலேயே இந்திய அதிகாரிகள், இந்திய இராணுவ அதிகாரிகள் பற்றி இலங்கை அதிகாரிகள் இவ்வாறு கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்று அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

## இலங்கையின் உயிரிழப்பு எண்ணிக்கை

8.1 கொழும்பு

சமீபத்திய ஜே.வி.பியினரது வன்செயல்களினாலும் 1989 இல் தமிழ் குழுக்களுக்கிடையே நடந்த மோதலாலும் குறைந்தது 6000 பேர் இறந்திருக்கிறார்கள். சராசரியாக மாதாந்தம் 500 பேராவது இறந்து வருகிறார்கள். இலங்கைப் பத்திரிகையான சண்டே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தி ஒன்றுக்கு பதில் அளித்த இராணுவ அதிகாரிகள் இந்த விபரங்களை அறிவித்திருக்கிறார்கள். சண்டே ரைம்ஸ் பத்திரிகை சென்ற வருடம் குறைந்தது 12 ஆயிரம் பேர் இறந்திருக்கிறார்கள் என்று தெரிவித்திருந்தது. சராசரியாக மாதம் ஆயிரம் பேராவது இறந்து கொண்டிருக்கிறார்கள் என்று இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டிருந்தது.

தமிழர் போராட்டத்தில் சென்ற வருடம் 11 ஆயிரம் பேராவது இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## இந்திய பாராளுமன்றத்தின் முன் குண்டு வெடிப்பு

7.1 புது டில்லி

இந்தியப் பாராளுமன்றத்துக்கு வெளியில் குண்டு ஒன்று வெடித்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தக் குண்டு வெடித்தது. இந்தியப் பாராளுமன்றத்தின் முக்கிய வாசலுக்கு அருகில் முப்பது யார் தொலைவில் ஒரு மரத்துக்கு அருகில் காலை 9 மணிக்கு இந்த குண்டு வெடித்தது. ஒரு மண்ணிறத் துணியால் மறைத்து வைக்கப்பட்டு இரண்டு புகையிலைத் தகரங்களுக்குள் இந்த குண்டுகள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. இந்த குண்டு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இந்த குண்டு மரத்திலிருந்து விழுந்ததால் வெடித்ததா அல்லது எறியப்பட்டதா என்பது பற்றி விசாரிக்கப்பட்டு வருகிறது. இதையடுத்து பாராளுமன்றத்துக்கும் மற்ற முக்கிய அரச நிலையங்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ஈழப்பிரச்சனைக்கு தீர்வு

## *இரு அரசுகளும் தங்களுடன் சார்ந்த இயக்கங்களை சமாதானத்திற்குகொண்டுவர முடிவு

6.1 புது டில்லி

இந்தியாவும் இலங்கையும் தங்களுடன் இணைந்திருக்கும் விடுதலை இயக்கங்களை நெருக்குதலுக் குள்ளாக்கி தங்களுக்கிடையிலான போரை நிறுத்த முயற்சிக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்துள்ளன. அத்துடன் இந்தியா இலங்கையில் உள்ள தனது படையினரை விரைவில் வெளியேற்ற தனது முயற்சிகளை துரிதப்படுத்துவதாக உறுதியளித்திருக்கிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் குஜரால் குமாரும் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்பே இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அத்துடன் தென்னாசிய நாடுகளுக்கிடையே தொடர்ந்து வரும் இழுபறிகளை சீர்செய்யும் நோக்குடன் இரு சிநேகபூர்வ ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் பல முடிவுகளை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பிரதமர் வி.பி.சிங் தான் பதவி ஏற்றபின் சூழவுள்ள நாடுகளுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்த இந்தியா முயன்று வருகிறது. ராஜீவ் காந்தியின் கொள்கைகளால் அயல நாடுகளுடன் இருந்த உறவுகள் சீர்கெட்டிருந்தன.

இதற்குள் நேபாள வெளிவிவகார அமைச்சர் இந்தியவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான உறவுகளை சீர்படுத்துவதற்கான முயற்சியில் இந்தியா வந்து பேச்சுவார்த்தை முடிந்ததும் நாடு திரும்பியிருக்கிறார். அத்துடன் பூட்டான் மன்னர் ஜிக்மே வாங்சுக் கடந்த சனிக்கிழமை தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வந்துள்ளார். இவர் இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வந்துள்ளார்.

பாகிஸ்தானின் ராஜதந்திரியான அப்துஸ் சத்தார் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வந்திருக்கிறார்.

பிரதமர் வி.பி.சிங்கைச் சந்தித்த பின் ரஞ்சன் விஜேரத்தின பத்திரிகையாளருக்கு கருத்து தெரிவித்த போது "நாங்கள் என்ன செய்ய முடியும்? அவர்களை கடலுக்குள் தள்ள முடியாது" என்று இந்தியப் படைகள் பற்றி கூறியிருக்கிறார்.

ரஞ்சன் விஜேரத்தினவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின் வெளியிட்ட கூட்டறிக்கையில் ரஞ்சன் விஜேரத்தின இந்தியப் படைகள் விரைவில் வெளியேறிய வேண்டும் என்ற தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இதற்கு பதில் அளித்த குஜரால் விரைவில் இந்தியப் படையை வெளியேற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை தாங்கள் மீண்டும் ஆராய்வதாகவும் வெகுவிரைவில் தமது முடிவை அறிவிப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். இந்த அறிக்கையில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு சகல அதிகாரங்களையும் வழங்கும் எனவும் இந்தியப் படை வெளியேறிய பின் மாகாண சபைக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதாகவும் ரஞ்சன் விஜேரத்தின உறுதியளித்திருக்கிறார். இரண்டு பகுதியினரும் புலிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்க்கும் இடையிலான சண்டையை நிறுத்த தங்களால் ஆன சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுவோம் எனவும் யுத்த நிறுத்தம் செய்விப்பதற்கு முயற்சிப்பதாகவும் உறுதியளித்திருக்கிறார்கள்.

இந்திய வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் இரண்டு நாடுகளும் இந்த இயக்கங்களை தனித்தனியே தொடர்பு கொண்டு சண்டையை நிறுத்துமாறு வற்புறுத்தப் போவதாக அறிவித்திருக்கின்றன. அத்துடன் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் "யுத்த நிறுத்தம் இல்லாமல் அமைதி ஏற்படப் போவதில்லை, அத்துடன் இயக்கங்களின் ஆயுதங்களை களையவும் முடியாது, அத்துடன் வடக்கு கிழக்கில் ஆட்சி ஒன்றையும் ஏற்படுத்த முடியாது என்பதை இயக்கங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார். அந்த அதிகாரி இந்தியப் படை வெளியேற்றத்துக்கான புதிய கால அட்டவணை எதுவும் இல்லை என்று தெரிவித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டு இதன் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வதாகவும் ஆனால் உறுதியாக எதுவும் கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார். இலங்கை அனுப்பியிருந்த நட்புறவு ஒப்பந்தத்தின் அறிக்கையை தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் கைச்சாத்திடுவதற்கு முன் தாங்கள் அந்த அறிக்கை பற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். இன்னொரு அதிகாரி கருத்து தெரிவிக்கையில் இலங்கையர்கள் நல்ல புரிந்துணர்வு கொண்டவர்கள் என்றும் இந்தியப் படை வெளியேற்றத்தில் உள்ள தர்க்க ரீதியான பிரச்சனைகளை அவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள் என்றும் நாங்கள் வேண்டிய காலத்திற்கு மேலாக இலங்கையில் தங்க மாட்டோம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

## படைப்பாளிகளும் தீர்வுகளும்

படைப்பாளிகளும் தீர்வுகளும் என்று நீங்கள் நல்லதோர் தேடல் முயற்சியில் இறங்கியுள்ளீர்கள். உங்கள் முயற்சிக்கு உதவியாக நானும் சில கருத்துக்களை முன்வைக்கலாமென விரும்புகிறேன்.

இன்றைய வர்க்க சமூக அமைப்பில் படைப்பாளிகள் அனைவரும் வர்க்க சார்புள்ளவர்களே. அவர்களின் படைப்புகளும் வர்க்க சார்புடையவே.

இந்த உண்மையை நிராகரித்து படைப்பாளிகள் பற்றி ஆராய்வது என்பது சரியான ஆராய்வு முயற்சி அல்ல என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

இலக்கியவாதிகள் என்றால் கஞ்சி குடிப்பதற்கு இல்லாதவர்கள், சர்ச்சைகள் செய்வது அவர்களது பொழுதுபோக்கு, அவர்கள் சமுகத்தில் வித்தியாசமானவர்கள், நான் ஒரு எழுத்தாளன் என்று மேடையேறி தொண்டை கிழியக் கத்துகின்ற அளவுக்கு வித்தியாசமானவர்கள் என்ற நிலையெல்லாம் இன்று மாறிவிட்டது. கஞ்சி குடிப்பதற்கில்லாதவர்கள் அதற்குரிய காரணங்களை அறிந்து அந்த நிலையதனை மாற்ற புறப்பட்டு விட்டார்கள்.எம்மை ஏமாற்றிப் பிழைப்பவர்களிடம் ஒரு கண்ணுக இருக்கின்ற காலம் மாறி மனிதனை மனிதன் ஏமாற்றுகின்ற சமூகத்தை மாற்ற படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் தங்கள் மொழியில் பேசிய காலம் மாறி ஏழைகள் தங்கள் ஏழ்மை நிலையை மாற்ற ஒரு கையில் ஆயுதமும் மறுகையில் எழுத்தாணியும் எடுத்த காலம் இது. இன்று அவர்கள் படைப்புகள் அவர்களது நிலையை மாற்றவே படைக்கிறார்கள். இவற்றைப் படிப்பவர்களும் பொழுதுபோக்கிற்காக படிக்கவில்லை.போர்க்களங்களில் இருந்து படிக்கிறார்கள். தங்கள் வாழ்வு நிலையை மாற்றுகின்ற வழியை தேடி படிக்கின்றார்கள்.

இன்று படைப்பாளி என்ற மாணவன் விமர்சகன் என்ற ஆசிரியன் திருத்துவதற்காக இலக்கியம் படைக்கவில்லை. அவன் தனது இன விடுதலைக்கு நாட்டு விடுதலைக்கு இலக்கியம் படைக்கின்றான். போர்க்களங்களில் இருந்து வருகின்ற படைப்புகள் பலதை நாம் இன்று பார்க்கிறோம். சோவியத்திலிருந்து வெளிவந்த தாய், வீரம் விளைந்தது என்பன இன்றும் படிக்கக் கூடியதாக இருப்பது மட்டும் அன்றி இன்றைய நமது பிரச்சனைகளுக்கு தீர்வு காணக்கூடியதாகவும் உள்ளது.

இந்நிலையில் இன்றைய படைப்புகள் மக்களுக்காக, இலக்கியம் படைப்பதாக சொல்லிக் கொள்பவர்கள் தாங்கள் படைக்கின்ற படைப்புகளில் தீர்வினையும் முன்வைக்க வேண்டும் என்று கருத்து முன்வைக்கப்படுகின்றது.

முடிவினைச் சொல்ல வேண்டும் என்பதற்காக

இலை போட்டு<br>
இருபத்தைந்து வருடமாகிறது.<br>
இன்னும் சோறு வரவில்லை.

என்ற சுதந்திரம் பற்றிய கவிஞனின் கவிதையை எடுத்து இவன் தீர்வினைக் காட்டவில்லை என்று விமர்சிக்க முடியுமா?

இவ்விடயத்தில் தான் நான் உங்கள் எடிட்டோரியலான ஒரு பகுதியுடன் முரண்படுகின்றேன்.

எமது தலைவர்கள் தனிநாடு ஒன்றே தான் எங்கள் முடிவு என்று சொன்னதால் எங்களால் அதை விட வேறு வழிகளில் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று குறிப்பிடுகிறீர்கள். இக்கருத்து சரியான கருத்தா?

தமிழர் கூட்டணித் தலைவர்கள் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்திருந்தார்கள். பாராளுமன்ற ஜனநாயகம் நமது மண்ணில் நீண்ட காலம் இருந்து தான் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதில் சந்தேகமுண்டா?

பண்டா செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதும் ஜே.ஆர் கண்டி யாத்திரைக்கு புறப்பட்டதும் பண்டாரநாயக்கா கம்பகாவில் வைத்து அவ்வூர்வலத்தை எஸ்.டி.பண்டாரநாயக்க மூலம் தடுத்து நிறுத்தினார். அதே வேளை அமிர்தலிங்கம் ஒப்பந்தத்தை செயல்படுத்த வேண்டிய வழிமுறையில் செயல்படுவதற்கு பதிலாக தார்சட்டி ஏந்தி சிங்கள சிறீ எதிர்ப்பில் ஈடுபட்டு ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதற்கு தனது பங்களிப்பை செலுத்தினார்.

அதுமட்டுமன்றி இறுதியான முடிவு சொன்ன தலைவர்கள் யார்? இவர்களின் கடந்த கால நிலைப்பாடென்ன? இவர்கள் இந்தியாவையும் வங்கதேசத்தையும் காட்டித் தானே தமிழீழம் கேட்டார்கள். வங்க தேசம் எவ்வாறு உருவானது? இந்தியா அங்கு எவ்வாறு செயல்பட்டது? சோவியத் யூனியன் அதற்கு எவ்வாறு துணைபோனது? இவை எல்லாம் அன்று நாம் அறிந்திருக்கவில்லையா? கூட்டணி தவிர்ந்த மேடைகளில், புத்தகங்களில், கட்டுரைகளில் இக்கருதுதுக்களை நீங்கள் கேட்கவில்லையா? வாசிக்கவில்லையா?

இத்தலைவர்கள் சோஷலிச தமிழீழம் காணுவார்கள் என்று எவ்வாறு நம்பினீர்கள்? சாதிப் போராட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த வேளையில் பாராளுமன்றத்தில் சங்கானைக்கு வியட்னும் வந்து விட்டது என்று குறைப்பட்டார்கள். இவர்கள் சாதிப் போராட்டத்தை மட்டுமல்ல வியட்னுமையும் ஆதரிக்கவில்லை என்பதை தெளிவாக காட்டினார்கள். மொழிவழித் தொழிற்சங்கம் கண்ட இவர்கள் தமிழ் தொழிலாளர்களுக்கு எதிராக தமிழ் முதலாளி பக்கம் சார்ந்து வழக்கு பேசினார்கள். இவர்களா சோசலிச தமிழீழம் காண்பது? ஓர் அரசியல் இயக்கம் ஓர் பிரச்சனைக்கு முடிவினை எடுப்பதும் அதற்காக செயற்படுவதும் அதனது கடமை. அந்த முடிவு சரியானதா? தவறானதா? என்று சிந்திப்பதும் செயல்படுவதும் எமது கடமை இல்லையா?

இன்று எம்முன்னே ஓர் புதிய பிரச்சனை எழுந்துள்ளது. புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதி அவர்கள் உலகத் தமிழர் பத்திரிகையில் ஒரு பேட்டியும் எங்களுடன் கருத்துகளை பரிமாறிக் கொள்ளவும் விருப்பம் தெரிவித்துள்ளார். இதே போல மற்ற இயக்கங்களும் சில முடிவுகளுக்கு வரவுள்ளன. இவ்வேளையில் நாம் என்ன செய்யப் போகிறோம்?

எம்முன்னே வருகின்ற இயக்கத்தவருக்கு எதிரான இயக்க குறைபாடுகளை சொல்லி அவரை ஏமாற்றுவதாக எண்ணி எமமை நாமே ஏமாற்ற போகின்றோமா? எங்களுக்காக எங்கள் விடுதலைக்காக போராடும் இயக்கத்தவர்கள் முன்னிலையில் அவர்கள் எடுக்கின்ற முடிவுகளின் சரிபிழை பற்றி கதைக்கப் போகின்றோமா? அல்லது பழைய நிலை தானா?

உடலால் கனடியத்திலும் உள்ளத்தால் ஈழத்திலும் வாழ்கின்ற நாங்கள் எங்களை நாங்களே ஏமாற்றுகின்ற வழியில் செயற்பட்டால் எம் மண்ணின் விடுதலையும் நீண்ட காலம் ஏமாற்றப்பட்டுக் கொண்டே போகும்.

எஸ்.மனோகர்

☆ ☆ ☆ ☆ ☆ ☆

## எல்லை தாண்டா...

போட்டுவிட்டு என்னவோ ஏதோ என்று பதறியவாறு போனான். சிகிச்சை நிலையத்தில் பிச்சைக் கிழவன் தள்ளுவண்டியில் படுத்திருந்தான். அவன் பயந்து போனான்.. ஆண்டிக் கிழவனுக்கு என்ன ஆகிவிட்டது. சிங்காரம் கிழவனின் கையைப் பிடித்து கலங்கினான்... நெஞ்சில தீடீர்னு வலிப்பா.. அடிக்கடி வர்ர வலி தான்.. ரெண்டு மூணு ஊசி போட்டா சரியாப் போயிரும்.."

தனக்குத் தானே கிழவன் ஆறுதல் சொன்னான்.. "இப்ப கவுருமெண்டு ஆஸ்பத்திரிக்கு போறன்.. நீ மாலினியைக் கைவிட்டுராதே.. நேத்து வந்து அழுதா... உன்னைய நம்பி தாய், தகப்பனை வுட்டுட்டு வந்திருக்கா.. அவளை ஏமாத்திராதே.. கைவிட்டுராதே.. என்ற கிழவன் அவன் முகத்தை பார்த்தவாறு கேட்டான்.. ஆமா சிங்காரம்.. நீ ஏன் அவளை இரண்டு நாளாப் பார்க்கேலே?..

அவன் பொய் சொல்லிச் சமாளித்தான். . ஓ இந்த பொய் எத்தனை பேருக்கு கைகொடுக்கிறது! "இல்ல.. தாத்தா! இப்ப நான் இங்கே தொண்டரா வேலை செய்யிறன்.. அதனுல் பார்க்க முடியல்ல. ." "சரிப்பா... அவளை கைவிட்டுராதே!" அடுத்த சில நிமிடங்களில் கிழவனைச் சுமந்து கொண்டு அந்த அம்புலன்ஸ் ஆஸ்பத்திரிக்கு ஓடியது.

மறுபடியும் ஒலிபெருக்கி அவன் பெயரைச் சொல்லி அழைத்தது. . சிங்காரம் பயந்து விட்டான்.. ஆஸ்பத்திரிக்கு போன கிழவனுக்கு என்னமும் ஆகி விட்டதோ! சிங்காரம் கோயில் காரியாலயத்திற்கு ஓடினான்.. "வாங்க தம்பி.." "உங்களை நம்பி ஒரு முக்கியமான பொறுப்பைக் கொடுக்கப் போறன். இங்க வந்திருக்கிற , வருகிற அகதிகளை நீங்க பேரு ஊரு விபரம் கேட்டுப் பதிய வேண்டும். அது தான் உங்க வேலை... கோயில் கமிட்டியைச் சேர்ந்தவர் சொன்னார்.

அடுத்த சில நிமிடத்தில் வெயில் நெருப்பாக கொளுத்திய போதும் கோயில் மைதானத்தில் மேஜை நாற்காலி போடப்பட்டது. அதில் சிங்காரம் உதவியாளனேடு உட்கார வைக்கப்பட்டான். காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிற வேலை அந்திசாயும் வரை நீடித்தது. ஆரம்பத்தில் சிங்காரத்திற்கு சந்தோசமாக இருந்தது.. போகப் போக அந்த நாற்காலி முள்ளாகத் தைக்கத் தொடங்கியது. அப்போது தான் பெரிய பதவிகள் பார்க்க அழகாக இருந்தாலும் அது முள்ளின் மேல் இருப்பதற்கு சமம் என்பதை அவன் உணரத் தொடங்கினான். . ஒரு நாளைக்கு இருபது பக்கங்கள், பெயர் விபரங்களை பதிந்தான்... கோயிலின் உள்ளே இருந்தவர்களை தோட்டவாரியாக அழைத்து பதிந்தான். அங்கு பெயர் கொடுத்த ஒவ்வொருத்தரையும் தனித்தனியாக பார்த்துக் கொண்டான்.

நேற்று வரை தோட்டங்களில் உழைத்த தொழிலாளர்கள் இன்று அகதிகளாக வந்திருக்கிறார்கள். இவர்கள் அகதிகளா? ஓ.. எப்போதும் இவர்கள் அகதிகள் போல் தானே இருக்கிறார்கள். லயத்தில் பார்த்ததற்கும் இப்போதும் என்ன வித்தியாசம்? அப்படியானுல் இவர்கள் அகதிகள் தானே? ஆம் எப்போதும் இவர்கள் நிரந்தர அகதிகள்..! அவர்களுக்கு இந்த நாடு வகுத்த எல்லையே அகதிகள் வாழ்கின்ற எல்லை தான்.. உலகில் உள்ள அகதிகளுக்கு உடை உணவு இடம் உழைக்காமல் கிடைக்கிறது. ஆனுல் இவர்களுக்கோ அவை உழைத்தால் தான் கிடைக்கிறது..

டெலிவிசன் வந்து விட்ட காலத்தில் கூட அவர்கள் இன்னமும் விபரம் தெரியாதவர்களாகத் தானே இருக்கிறார்கள். உலகமே இன்று சொந்தமாக்கிக் கொண்ட கல்வி இவர்களுக்கு மட்டும் ஏன் அந்நியமாகி விட்டது?

நேற்று ஒரு சம்பவம் .. ஒரு குடும்பத்தை பெயர் கேட்டு விபரம் பதிந்தான்.

"பேரு" "முனியாண்டி" "வயசு" "நாப்பதுக்கு மேல் இருக்கும்" "நாப்பதுக்கு மேலன்னு கரெக்டாய் சொல்லுங்க" "கரெக்டா சொல்றதுக்கு பொறந்த ஆண்டு தெரியாதுங்க" அப்புறம் சிங்காரம் முனியாண்டியைப் பார்த்து குத்து மதிப்பில் வயதைக் குறித்தான். "என்னன்ன எரிஞ்சிப் போச்சி.. அதுட பெறுமதி..." "நமக்கிட்ட பெறுமதியானது எதுவும் இல்லீங்க.. ஆனு சிட்டிசன் சிப் கொப்பி எரிஞ்சு போச்சுங்க. அது தான் கவலைப்படுறேன்" சிங்காரத்திற்கு முனியாண்டியைப் பார்த்த போது பாவமாக இருந்தது. தன் காம்பராவில் இருந்த பொருட்கள் எரிந்ததற்கு கவலைப்படாதவன் அந்த நாட்டு பிரஜையாக்கப்பட்டதற்கு அத்தாட்சியாக கொடுக்கப்பட்ட வெறும் காகிதம் எரிந்ததற்கு அழுகிறானே. ஓ. வெறும் காகிதம் அது? இல்லை. இந்த நாட்டுக்காக உழைத்து வந்த இனத்தை நாடற்றவராக ஆக்கப்பட்ட போது அவர்கள் ஒவ்வொருத்தரும் இந்த நாட்டில் வாழ ஒரு லைசன்சு. அதற்கு பெயர் சிட்டிசன்சிப். அது கிடைக்காதவர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள். அன்று கடைசியாக பெயர் விபரத்தை பதிந்து விட்டு நிமிர்ந்து பார்த்தபோது மாலினி தான் நின்று கொண்டிருந்தாள். மாலினி பெயர் பதியத்தான் வந்திருக்கிறளோ? சிங்காரம் எதுவும் பேசாமல் அவளைப் பார்த்தான்.. அவள் தன் உணர்ச்சிக்கு உருவம் கொடுக்காமல் கண்களால் சாடை காட்டினாள். கண்கள் கலங்கி வந்தன.. சிங்காரம் அவள் அருகே போய் "இங்கெல்லாம் வந்து தொந்தரவு கொடுக்க வேணும். இப்ப நான் ஒரு வேலைய பாரமெடுத்திருக்கேன். நீ போய் தோட்டத்து ஆளுகளோட இரு.நான் இங்க தான் இருக்கேன்." என்று சொல்லி விட்டு பதிவேட்டோடு காரியாலயத்திற்குப் போனான். மாலினி அழுது கொண்டே போனாள்

நாலு நாட்களின் பின் ஒரு நாள் அன்று என்ன நடந்ததோ தெரியவில்லை. அகதிகள் அன்று லொறிகளில் வந்து குவியத் தொடங்கினார்கள். சிங்காரத்துக்கு எதுவும் புரியவில்லை. இனக்கலவரம் நின்று விட்டது என்று நினைத்த போது புதிய அகதிகள் வந்து இறங்கி விட்டார்கள். அந்த மாவட்டத்தின் எல்லையில் இடம் பெற்ற கலவரத்தினுல் பாதிக்கப்பட்ட மக்கள் தான் அவர்கள். அவர்கள் அத்தனை பேரும் ரப்பர் மரத் தோட்டத்தை சார்ந்த தொழிலாளர்கள். சிங்காரத்துக்கு அன்று வேலை அதிகமாகி விட்டது போல் தெரிகிறது. லொறிகளில் இருந்தவர்களை வரிசையாக நிறுத்தி விபரம் பதிய வைத்தார்கள். அனுமான்வால் போல் வரிசை நின்றிருந்தது. அதில் அதிகமானேர் கட்டிய துணியுடன் வந்திறங்கினார்கள். இன்னமும் அவர்கள் முகத்தில் பயம் போகவில்லை.

சிங்காரம் வேகமாக பெயர்களைப் பதிந்தான்.அவர்கள் அத்தனை பேரினது முறைப்பாடுகள் எதனையும் எடுத்து வர முடியவில்லை என்பது தான். மலையேறி தாக்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் அவர்கள் எந்த ஏற்பாடும் செய்யாமல் இருந்து விட்டார்கள்.

"நாசமாப் போனவனுக இந்த மாதிரி பன்னிட்டானுகளே! ஒண்ணு தின்னு ஒண்ணு கெடந்து ஒண்ணு இருந்து இந்த மாதிரி செஞ்சானுகளே. . அந்த கூட்டத்தில் ஒரு கிழவி ஒப்பாரி வைத்தாள். சிங்காரம் "யாரு" என்று கேட்டான். "பக்கத்து நாட்டில இருந்த சிங்களவனுக"

சிங்காரத்துக்கு மாலினியின் ஞாபகம் தான் வந்தது. இனிமேல் அவளோடு... பகல் இரண்டு மணியிருக்கும். சிங்காரததுக்கு தூக்கம் வரும்போல இருந்தது. ஆனுலும் அவன் அதனை அடக்கி தன் வேலையைக் கவனித்தான். இன்னும் கொஞ்சப் பேர் தான் இருந்தார்கள். இரண்டு லொறி அகதிகளை குறிப்பெடுத்து விட்டான்.அவன் பெயர், விபரம் பதிகிறான். "பேரு பியதாசா" சிங்காரத்துக்கு வியப்பாக இருந்தது. மறுபடியும் பெயரைக் கேட்டான். அவன் அதே பெயரைத் தான் சொன்னான். அவனுக்குப் புரியவில்லை. பியதாசா.... சிங்களப் பெயர்.... ஒரு சிங்களவன் ஏன் இந்த அகதிமுகாமுக்கு வருகிறன்.?

பெயரை பதியாமல் நிமிர்ந்து பார்த்தான் அவன்.. அரை குறை தமிழில் பேசினுன். . "சிங்களவனுன நான் ஏன் முகாமுக்கு வந்திருக்கேன்னு தான் நீங்க பாக்கிறீங்க. நான் வேரகம ரப்பர் தோட்டத்தில் தமிழ் ஆள்களோட லயத்தில் வேலை செய்யிறவன். நான் கல்யாணம் கட்டியிருக்கிறது ஒரு தோட்ட தமிழ் பொம்பள. பேரு லச்சுமி..

சிங்காரத்துக்கு பொட்டில் அடித்தது போலிருந்தது. பியதாசவுக்கு பக்கத்தில் லச்சுமி நின்று கொண்டிருந்தாள். சிங்கள பெண்ணை மணந்தவர்களும் தமிழ்ப் பெண்ணை மணந்தவர்களும் அகதிகளாக வந்திருக்கிறார்கள். கலப்புத் திருமணத்தால் தேசியத்தை உருவாக்கலாம் என்று சொன்னவர்கள் எங்கே? "நல்ல தாய் தகப்பனுக்கு பொறந்தவனுக இந்த அனியாயம் செய்ய மாட்டானுக... ஆனு இவனுக என்னத்தைப் பண்ணினுலும் எங்க இரண்டு பேரையும் பிரிக்க முடியாது" என்ற பியதாசா லச்சுமியைப் பார்த்தான். இருண்டிருக்கிற அவள் முகத்தில் ஒரு பிரகாசம். எங்கே அழைத்துச் செல்வது போன்ற ஒரு உணர்வு அவனுக்கு.. பியதாசாவை ஏறிட்டு பார்க்கத் தயங்கினுன். தமிழர்களை அடிக்கிற சிங்களவர்கள் மத்தியில் இந்த பியதாசா ஒரு மனிதன் - அதற்கு மேல் ஒரு மகாத்மா.

அவனுடைய நிழலில் கூட நிற்க தனக்கு தகுதியில்லை என்ற நினைப்பு அவனுக்கு .... தன்னை மன்னிக்க கோருவது போல அவன் கண்களைப் பார்த்தான்.

அன்று இரவு நாலு பேர் சுற்றி வர இருந்தும் அதைப் பெரிதுபடுத்தாத சிங்காரம் மாலினியின் கண்ணீர்த்துளிகளைத் துடைத்து விட்டு அவளை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான். மாலினிக்கு எதுவுமே புரியவில்லை. உங்களுக்கு ஏதாவது புரிந்ததா?



படிப்பகம்

www.padippakam.com

கொழுந்து

திரு.அந்தனி ஜீவா அவர்களை ஆசிரியராகக் கொண்டு மலையக வெளியீட்டகத்தினால் கொழுந்து இலக்கிய சஞ்சிகை வெளியிடப்படுகிறது. 1988 இல் தொடங்கிய கொழுந்து மலையக மக்களின் வாழ்க்கைப் பின்னணிகளுடன் இணைந்து இலக்கிய பணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. பல சுவையான அம்சங்களைத் தாங்கி வந்து கொண்டிருக்கும் கொழுந்து இலக்கிய ஏட்டிற்கு எமது வாழ்த்துக்கள்.

கொழுந்து சஞ்சிகையைப் பெற விரும்புபவர்கள் கொழுந்து, 57 மகிந்த பிளேஸ், கொழும்பு 6, இலங்கை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள். இரு மாத இதழான கொழுந்தின் விலை பிரதி ஒன்று ஐந்து ரூபாவாகும். கொழுந்து சஞ்சகையில் வெளிவந்த மாத்தளை சோமுவின் "எல்லை தாண்டாத அகதிகள்" என்னும் சிறுகதையை மறுபிரசுரம் செய்கிறோம்.

சிறுகதை

# எல்லை தாண்டா அகதிகள்

மாத்தளை சோமு

"யட்டவத்தை தோட்டத்து லயத்தை அடிச்சி, நொறுக்கி நெருப்பு வைச்சி,லயத்தில் இருந்த சாமான் சட்டு முட்டுகள தூக்கிட்டு போயிட்டானுக. லயத்தில இருந்த ஆளுக புள்ள குட்டிகளோட ஓடி மறைஞ்சிட்டாங்க.... தோட்டத்துதொரை எந்த நடவடிக்கையும் எடுக்கலியாம்...எல்லாம் முடிஞ்சோன்ன தோட்டத்து லொறியில ஆள்கள ஏத்திமாத்தளை மாரியம்மன் கோயில இறக்கிவுட்டுட்டு போயிட்டாரு.இம்புட்டும் செஞ்சது யார் தெரியுமா? யட்டவத்த தோட்டத்துக்குப போற சந்தியில இருக்கிற கடைக்காரன் மகன்தான்!" கீழமூச்சு வாங்க ஓடிவந்த வேலு பதறியபடி சொன்னான்... அவன் சொன்னது அத்தனையும் உண்மை! நடந்ததை நேரில் பார்த்தவன்...கண்கள் பார்த்ததை வாய் வெளிப்படுத்துகிறது.

ஒரு வட்டம் போட்டது போல் வேலுவைச் சுற்றி ஒரு கூட்டம்...அதில் சிங்காரம் ஆண் கிழவன் என்று ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

"இந்த பக்கத்தில இருந்த ஒரே ஒரு தோட்டத்தைய, ம எரிச்சிட்டானுகளே!கவுருமெண்டும் ஒரு நடவடிக்கை எடுகல்ல....நாடு போற போக்கு சரியில்ல..."உழைப்பில் தேயிலைக்காட்டுக்கு ஒரு பரம்பரையைத் தியாகம் செய்த பிரதிநிதியின் குரல்!

"அட நீ ஒண்ணு ஏதாச்சும் கலவரமனதும் இந்தியாவுக்கு போயிடுவோம்னு சொல்வீங்க கலவரம் முடிஞ் சோன்ன அத மறந்திடுவீங்க..ஒரு நெலையான பேச்சு நம்ம ஆளுகளுக்கு இல்ல..அதனால்தான் அடிவிழுது "இது ஒருத்தன்.

"இந்த நாட்டிலதான் எங்க பாட்டன் பூட்டன் ஒழைச்சான்!தேயில தூறுக்கு அடியில தான் அவங்கள புதைச்சோம்! நாங்க ஏன் இந்த நாட்டை விட்டுபோவேணும்? ஒருதரும் போகக்கூடாது..." தன்னை மறந்த சிங்காரம் "ஆவேச" மாக சொன்னான்..

"ஆமாமா இவுரு ஏன் இப்புடி சொல்லமாட்டாரு? வீட்டுல சிங்களத்த வைச்சிட்டு வெளியில வீராப்பா பேசுறாக்கும்..இவருக்குத்தான் இந்தியா போகமுடியாது! இந்தியாவுல இவனை எவன் ஏத்துக்குவான்?"

சிங்காரத்தை தாக்க வேண்டும் என்று காத்திருந்தவனின் தாக்குதல்"என்னடா சொன்ன" என்று சிங்காரம் அவனோடு "மோதப்" போன போது பக்கத்தில் இருந்தவர்கள் குறுக்கிட்டு அந்த சண்டையை அப்படியே அடக்கி விட்டார்கள் சிங்காரம் நெஞ்சில் சுமை ஏறியவனாக தலை குனிந்திருந்தான்.. ஆண்டிக்கிழவன் அவனை ஆறுதல் படுத்துவது போலவும் மற்றவர்களுக்கு பதில் சொல்வது போலவும் பேசினான். சிங்காரம் அவளைக்கட்டிக்கிட்டு ஒரு வருசமாச்சி! இன்னைக்கு அவ சிங்களத்தி மாதிரியா இருக்கா! அசல் தமிழிச்சி மாதிரியல்ல இருக்கா! அந்தக்கதையெல்லாம் இப்ப எதுக்கு...? நடக்கிற வேலையப் பாருங்க...ஷீம்...ஆயிரம் கலவரம் வந்தாலும் நம்ம ஆளுக மத்தியில ஒத்துமை வருமாங்கிறது சந்தேகம்...

"ஆண்டிக்கிழவன் உள்ளதை நல்லதைச் சொல்லி அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் பார்த்தான் முடியவில்லை...அடுத்த கேள்வி வெடித்து விட்டது!

"அது சரி தாத்தா! ஏன் சிங்காரத்துக்கு சப்போட் பன்னனும்? நம்ம லயம் எரிஞ்சதுக்கு அவன்தான் காரணம்...! அவன் சிங்களத்தியை கட்டப்போயி அவன் தம்பிதானே லயத்துக்கு நெருப்பு வைச்சான்! "என்று ஒருத்தன் பேச்சை நீட்டப் போனது கிழவன் இடைமறித்தான். ."நம்ம லயம் நீ சொன்னமாதிரி சிங்காரத்தினல எரிஞ்சதுன்னு வைச்சுக்குவோம் அப்படின்னு மத்த லயம் யாரால எரிஞ்சிச்சி? இதெல்லாம் நம்ம தலை எழுத்தினல நடக்குது... யாரையும் கொறை சொல்லி பிரயோசனம் இல்லை என்னைக்கு வெள்ளைக்காரனை நம்பி இந்தியாவில இருந்து வந்தோமோ.. அன்னையில இருந்துதான் இந்த பிரச்சனை!. .வெள்ளைக்காரன் நமக்கு ஒரு முடிவும் காட்டாம சீமைக்குப் போயிட்டான் அந்த நேரமே நாம ஒரு முடிவை வெள்ளைக்காரனுகிட்ட கேட்டிருந்தா இன்னைக்கு நாம நிம்மதியா வாழ முடியும். . நாம இந்தியாவுல இருந்து வந்தாலும் இந்த ஊரையே தாய் நாடா நெனைச்சோம் சிலோன் பூரா பஸ் ரெயில் ரோடு போட்டது நம்ம ஆளுகதான்..அதில எத்தனையோ பேர் செத்துப்போயிட்டாங்க

சிங்கமலை சொரங்கத்து சுவர்ல போயி பார்த்தா இந்த ரோடு போட்டதில எத்தனை பேரு செத்தாங்கிறது தெரியும். அப்படி நம்ம ஆள்க உசிரைச் குடுத்து உழைச்ச நாடு இது.... !

ஏன் இந்த நாட்டை விட்டு நாங்க போவேணும்? கிழவன் அதே தோட்டத்தில் பிறந்து கங்காணியாகி-தலைவராகி இன்று முதிர்ந்து உதிரத் தயாராகவிருப்பவர். எவரும் அவருக்கு தெரியாமல் அங்கே பிறந்ததில்லை. திருமணம் செய்வதில்லை. அவருக்கு எந்த கட்சியின் மீதோ சங்கத்தின் மீதோ தின்பட்ட கற்றுதல் கிடையாது. ஆனாலும் அங்கே நடக்கிற எல்லாவற்றிலும் அவர் இருப்பார். ஆண்டிக் கிழவன் கேட்ட கேள்விக்கு எவரும் பதில் கொடுக்காததால் அவனே அந்த வாக்குவாதத்தை முடித்து வைத்தான்... "சரி சரி போங்க.. பேச்சு நீட்ட வேணும்..சிங்காரம் நீ யோசிக்காதே! அதெல்லாம் அப்படித்தான்... தைரியமாக இரு!" அந்த கூட்டம் மெல்ல கரைந்து போயிற்று...

சிங்காரம் ரொம்பவும் சோர்ந்து போய் அகதி முகாமிட்ட கோயிலின் உள்ளே போனான்... அவன் மனம் மழை இல்லாத தேயிலைச் செடியாக கருகி விட்டது.. தான் சிங்களப் பெண்ணான மாலினியை கல்யாணம் செய்ததை இத்தனை நாளும் நெஞ்சில் அடக்கி வைத்து குத்தி காட்டினான்....! மாலினி சிங்காரததை கைகோர்த்து ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது... அதை இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறானே....! அதே நேரததில் அவன் சொன்னதில் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கிறது! அன்று அந்த லயத்துக்கு நெருப்பு வைத்தவன் மாலினியின் அண்ணன் தான்... அவன் கையில் தான் தீவட்டி இருந்தது....!

தன்னால் தான் அந்த லயம் எரிந்து விட்டதோ..! அவன் மனம் எங்கோ பள்ளத்தில்.... விழுந்து கொண்டேயிருந்தது... சடாரென்று ஒரு நினைவு வெட்டி மறைந்தது... அவர்கள் காதல் உச்சக் கட்டத்தில் இருந்த காலம். .. அந்த காதல் விவகாரம் எப்படியோ அப்பாவின் காதில் விழுந்து விட்டது.. அவர் அவனிடம் நேரிடையாகக் கேட்டார். சிங்காரம் யோசித்தான்... இப்போது பொய் சொன்னாலும் பிறகு எப்போதாவது உண்மையைக் கக்க வேண்டி வரும். அதனால் தான் நிஜத்தை... ஆம்! சிங்காரம் தான் மாலினியைக் காதலிப்பதாகச் சொன்னான். அவ்வளவுதான்.... அவர் இதயம் ஸ்டோர் அடுப்பாக கொதித்தது. ..

இனி நீ எனக்கு மகனில்ல.. இனிமே இந்த காம்பராவுல கால் வைக்காதே... ஏன் மூஞ்சியில முழிக்காதே..!

சிங்காரம் மறுபேச்சில்லாமல் அந்த காம்பராவை விட்டு போய் துரையிடம் சொல்லி வேறு காம்பராவில் குடியேறி தன் புதுக்கதையைத் தொடக்கினான்... அதற்கு அடுத்த வாரம் மாலினியை பக்கத்து பொலிஸ் ஸ்டேசன் கூட்டிப் போனான்.. அங்கே இருவரும் ஒருவரை ஒருவர் காதலிப்பதாகவும் திருமணம் செய்ய விரும்புவதாகவும் முறைப்பாடு செய்து கையெழுத்திட்டு வந்தார்கள். சாதி சமயம் மொழி என்ற வட்டத்துக்குள் வட்டமடித்து வாழ்ந்த மாலினியின் பெற்றோர்கள், அவருடைய சகோதரர்கள் இந்த தமிழ் இளைஞன்- சிங்கள நங்கை திருமணத்தை முறியடிக்க வந்து சட்டத்திற்கு முன்னால் சரணடைந்து போனார்கள்...

சிங்காரத்தை கைகோர்த்த மாலினியைப் பார்த்து அவளின் அண்ணன் நெருப்பாய் வார்த்தைகளைக் கக்கினான்... தமிழ் பயலோடயா போற... போ? உன்னையும் அவனையும் கவனிக்கிறேன்...

அன்று சொன்னதை இன்று செய்து விட்டானே? சிங்காரத்துக்கு யோசனை யோசனையாக வந்தது.. கல்யாண மண்டபப் பக்கம் போனான். மாலினி கலங்கிய கண்களுடன் அவன் அருகே வந்து நின்றாள்.. அவன் மௌனமாக இருந்தான். ஒட்டிப்போயிருந்த அவன் உதடுகள் பிரியவில்லை... மாலினிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் தோளில் சாய்ந்து அழுதாள். அவளின் கண்ணீர் துளிகள் அவன் மார்பை நனைத்தன. ஆனால் உன நெஞ்சை அது நினைக்கவில்லையே. சிங்காரத்துக்கு மாலினியைப் பார்க்கும்போது அவளுடைய அண்ணன் நினைவு தான் வருகிறது. அதனை அவனால் தவிர்க்க முடியவில்லை... மெல்ல அங்கிருந்து நழுவி கூட்டத்தில் கலந்து தேரடிக்கு வந்தான் சிங்காரம்.. தேர்க்கூடாரத்தை அவன் தட்டிப் பார்த்தான்.. மாசி மகத்தில் ஓடுகிறதேர் அலங்கரிக்காத மணப்பெண்ணாக நின்றது. ..

ஒரு கணம் நினைவுக்குள் விழுந்து திரும்பினான் அவன்... அந்த மைதானம் மாசி மகத்தில் நகர்வலம் போகிற பஞ்ச ரதங்களும் நிற்கிற மைதானம்... அங்கே கலர் கலராக பூக்கள் பூத்துவிட்டது போன்ற மக்கள் கூட்டம்... அந்த மக்களிடையே காவடி கரக பொய்க்கால் குதிரை இன்னும் பல கோஷ்டியினரின் ஆர்ப்பாட்டங்கள், வானத்தில் எதிரொலிக்கிற மாதிரி முழங்குகிற வாத்தியங்களின் இசை, அலங்கார பல்புகளின் மினுக்கங்கள், அரசராகோசல்கள் ஆகியன கவிஞர்கள் சொல்கிற மாதிரி அந்த இடத்தை தேவலோகமாக்கியிருக்கும்! இன்று? ஓ. . அந்த மைதானம் அகதி முகாமாகி விட்டது!

சிங்காரம் அந்த சித்திரத் தேரில் தொங்குகிற சிறுமணி ஒன்றை அசைத்தான்... அப்போது அதிலிருந்து கிளம்பிய ஓசையில் கிளர்ந்த நினைவு கூடையில் விழுகிற கொழுந்தாக அவன் நெஞ்சில் விழுகிறது... மாலினியும் சிங்காரமும் அந்த கோயிலுக்கு வந்தபோது அந்த தேரைப் பார்த்தார்கள்.. அன்று சாதாரண நாள் எவரும் இல்லை... அவன் அந்த தேரின் மணியை அசைத்துப் பார்த்தான்...கிணிங்... கிணிங்... என்று அசைந்து ஒரு இதமான ஓசையைக் கொடுத்தது அந்த மணி... மாலினி தானாக அந்த மணியை அசைக்கப் போனாள்... அவளுக்கு எட்டவில்லை.. அப்போது அவன் அவளின் கரத்தை பிடித்து இணைத்து உயர்த்தி அந்த மணியை அசைத்தான்... கிணிங்... கிணிங்...

ஓ.. என்னமாய் இசைக்கிறது இந்த சிறுமணி. .. அப்போது அவன் சொன்னான்.. நான் தனியா மணி அசைக்கிறதை விட இப்ப வந்த சத்தம் நல்லா இருக்கு.... ஏன்? மாலினி கேட்டாள்... ரெண்டு பேரு கையும் சேர்ந்திருக்கே... அதனால் தான்... மாலினி வெட்கித்து அவனுடைய மார்பில் சாய்ந்தாள்... அவன் அவளை அப்படியே கட்டிப் பிடித்து முத்தமிட்டான்.. எவனோ தேர்மணியை அசைக்க அவன் நினைவு அறுந்து விழுகிறது... சிங்காரம் திரும்பிப் பார்த்தான்.. அங்கிருந்தவன் நல்லுசாமி..., சிங்காரம்! இங்கதான் இருக்கியா? ஒன்னய எங்கங்க தேடுறது? ஒனக்குத் தெரியுமா? பாம்புகல் ரோட்டு கடை மொதளாளியைக் வெட்டி கடையில போட்டு எரிச்சிட்டானுக.. அவருட்டு மனுசியையும் புள்ளைகளையும் கெடுத்து தேயிலைத் தோட்டத்துல போட்டானுகளாம். .. இப்ப அவங்கள கோயிலுக்கு கொண்டாந்திருங்க...,

சிங்காரம் ஓடினான்... அவனுக்கு முன்னால் நல்லுசாமி ஓடினான். இருவரும் கோயில் காரியாலயத்திறகு போனார்கள்... அங்கோ கிழித்து நாராகப் படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தார்கள். இத்தனை நாளும் காத்து வந்ததை காவு கொடுத்ததற்கு அடையாளமாக இருந்தன அவர்களது தேகம்...

அவனுக்கு மயக்கம் வரும் போலிருந்தது.... அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டார்கள்... பாம்புகல ரோட்டு கடை முதலாளியையா எரித்து விட்டார்கள்? நேர்மையாக வர்த்தகம் செய்த அவரின் கரங்கள் தான் பலருக்கு அள்ளிக் கொடுத்தன.... அவரையா? ஓ. . நாட்டுக்கு என்ன நடந்து விட்டது? பெரும்பான்மை என்ற ஒரேயொரு மமதை சிறுபான்மை இனத்தை அழிக்கத் தூண்டுகிறதோ? இவர்கள் என்ன தான் செய்தார்கள்! இந்த மண்ணுக்காக உழைத்ததைத் தவிர வேறு எதுவுமே தெரியாதவர்கள்! உழைப்புக்கேற்ற கூலிக்காக மட்டும் போராடியவர்கள். இவர்களுக்கு அகிம்சை தான் ஆயுதம். இவர்களை ஏன் அடிக்கவேண்டும்? ஓ.. மணமாதாவே.. உனக்கு சாதி, சமய, நிறபேதம் தெரியாதாமே! அப்படியானால இந்த உழைக்கும் மக்களின் ரத்தக்கறை உன் மீது பட்டுள்ளதே? அதனை எப்படி அனுமதித்தாய்.. .ஓ .. நீ கண்களை மூடி விட்டாயோ..

சிங்காரம் மனம் ஒடிந்த நிலையில் அந்த அகதி முகாமின் ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தான்.. அவனுக்கு மாலினியைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணமே வரவில்லை.. மாலினி அவனை அகதி முகாமில் தேடிக் கொண்டேயிருந்தாள்.. சிங்காரம் தன்னை ஒதுக்கி வருகிறான் என்பது அவளுக்குப் புரியத் தொடங்கி விட்டது....

ஒரு பெரிய அண்டாவை தூக்க முடியாமல் தூக்கி வந்தது ஒரு கோஷ்டி.., உண்மையில் ஒரு அண்டாவைக் குறைந்தது எட்டுப்பேர் தூக்க வேண்டும். ஆனால் ஐந்து பேர் தூக்கினார்கள். "யாராவது ஓடி வாங்கப்பா. . ஒதவி செய்ங்கப்பா" என்று ஒருவர் கத்தினார். அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருந்த சிங்காரம் டக்கென்று அந்த கோஷ்டியோடு இணைந்தான்.. "ஒங்க மாதிரி நெறையப் பேர் வந்த ஒதவி செஞ்சா நல்லா இருக்கும். எல்லாம் அகதியா இர்திக்கிட்டா யாரு தம்பி தொண்டரா வேலை செய்வா?" அவர் சொன்னது நியாயமாகப் பட்டது.. இந்தப் பெரிய கூட்டத்தில் ஓடியாடி வேலை செய்ய நிறையபேர் தேவை.. அதற்கு சம்பளத்திற்கு ஆள் பிடிக்க முடியாது. . இங்கே தான் தொண்டர்களை உருவாக்க வேண்டும்.... சிங்காரம் அந்த நிமிடத்திலிருந்து தொண்டராக மாறினான். ..

சிங்காரத்திற்கு அந்த அகதி முகாமில் தொண்டராக வேலை செய்வது பிடித்திருந்தது... முகாமில் வேலை இல்லாமல் அம்மா இருக்க குறிப்பாக மாலினியின் பார்வையில் இருந்து அவனின் நினைவுகளில் இருந்து விலகி நிற்க இந்த தொண்டர் வேலை அவனுக்கு உதவி செய்தது... அன்று பகல் உணவை பரிமாறுவதில் சிங்காரம் மும்முரமாயிருந்தான்... அந்த நேரத்தில் சிகிச்சை நிலையத்திலிருந்து ஒலிபெருக்கி அவனை அழைத்தது.. வேலையைப்

(6ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

# நாடும் நடப்பும்

-ஐயம்பிள்ளை-

அண்ணை உங்களைத்தான்... எங்க வேகமாகப் போறுர். மனிசனுக்கு நிண்டு கதைக்க நேரமிருந்தாலும் நிறக மாட்டார். அவ்வளவு அவசரமாய் போயிடுவார். அப்படி ஒரு அவசரமும் இல்லை. கதைச்சால் பிரச்சனை. ஆள் அவுட்....

மனிசர் தங்களுக்கு தெரிஞ்ச ஞாயத்தை எங்கண்ட மண்ணில கதைக்கேலாது. வாய் திறக்கப்படாது. வாய் திறக்கிறது சாப்பிட மட்டும் தான் எண்ட நிலைக்கு போயிட்டுது. என்னது நடந்தாலும் கண்ணை, காதை, வாயைப் பொத்திக் கொண்டிருக்க வேணும். அந்தளவுக்கு நிலைமையள்....

முந்தி இந்த மனிசன் சந்தியில நிண்டு அருளற்றை கடையில வெத்திலை ஒரு வாய்க்கு போட்டு வாசிகசாலையில நாலு பேப்பரில வாறதைப் படிச்சு தனக்கு தெரிஞ்ச நாலு சனத்தோட நாட்டு நிலைமையள் பற்றி ஒரு அலசு அலசுவார். விலைவாசி முதற்கொண்டு விண்வெளி வரை சரியோ.. பிழையோ.... தனக்கு தெரிஞ்சதுகளை நாலும் பேரும் தெரிஞ்சு சரியான ஒரு கருத்துக்கு வந்து நல்லதைச் செய்ய வேணும் எண்ட நல்ல மனசு அந்த மனிசனுக்கு..

அது ஒரு காலம்.ஆனுல் மனிசன் கதைக்கிற கதையள் இப்ப எங்கட பெடியளுக்கு பிடிக்கிறேலை. இனி கனக்க கதைச்சால் தொண்டைக்குள்ள துவக்கு நுனி வரும் எண்டு ஒரு நாள் சொல்லிப் போட்டாங்கள். அதுக்கு பிறகு மனிசன் பறக்கப் பறக்க போடும். இந்த நாடே அப்படியாப் போச்சு.

உண்மை தான் பாருங்கோ. தமிழினத்தின்ரை விடிவுக்கெண்டு வெளிக்கிட்ட இயக்கமெல்லாம் தமிழனையே கொல்லுறதாலை தமிழனுக்கு விடுதலை தேடிக் கொடுக்க நிறகினம். எங்கண்ட நாட்டில நாயிலும் கேவலமாய் மனிசன்ரை உயிரின்ர மதிப்பு போயிட்டுது. எங்கண்ட இனமே நாளைக்கு உயிர் இருக்குமோ எண்ட ஐமிச்சத்திலை தான் ஒவ்வொருநாள் வாழ்க்கையையும் நகர்த்துதுகள்.

வெளிநாடு போக வசதியுள்ளதுகள் வெளிநாடு வெளிக்கிடுறதும் மிஞ்சின சனம் தொடர்ந்தும் அழியிறதுமாய் இருக்கிற நிலைமையாய் தொடர்ந்தும் இருக்குது.

நாங்கள் சொல்வது தான் சரி. நாங்கள் செய்யிறது தான் சரியெண்டு தாங்கள் மட்டும் இந்த நாட்டு மன்னர் எண்ட நினைப்போட நாட்டை சுடுகாடாக்கிறதெண்டு எங்கண்ட பெடியள் நிற்கிறுங்கள். ஒவ்வொருத்தரும் தாங்கள் செய்யிற தவறை மறைக்கவும் நியாயப்படுத்தவும் கொலைகளைச் செய்யிறுங்கள். தங்களுக்கு மட்டும் தான் அதிகாரம் இருக்கோணும் எண்டு எங்கட இனத்தையல்லே அழிக்கிறுங்கள்.

இதாலை மக்களில்லாத மண்ணில தான் இவையளின்ர அதிகாரம் இருக்கும் போல. ..

கட்டாய இராணுவப் பயிற்சிக்கெண்டு சின்னஞ்சிறிசுகளை பிடிச்சுக் கொண்டு போறுங்கள். சனம் எதுவும் கதைக்கமுடியாமல் இருக்கு. கதைச்சால் வெடி விழும். எங்கண்ட இனமே எங்கள அழிக்கிற அளவுக்கு விடுதலை தாகம் பாருங்கோ.

இந்தியா வந்து எங்களுக்கு உதவி செய்யும் எண்டு ஒரு காலத்தில் நம்பினம்.ஆரவாரிச்சு வரவேற்றம். கடைசியில் அவனும் எங்களை அழிச்சான். இந்தியா தன்ர நன்மைக்காக எங்கட இனத்தை அழிச்சது. அனுல் பெடியள் குழுக்கள் சிலதும் அவங்களோட சேர்ந்து எங்களை அழிக்கிறுங்கள். அவங்களுக்குத் துணையாய் எங்கண்ட பெடியள் நிறகிறதாலை எங்களுக்கு இன்னமும் அழிவு.

இந்தியா வெளியேறுறதை அவையள் விரும்பேலை. வெளிக்கிட்டால் தங்கண்ட அதிகாரத்தை நிலை நாட்ட முடியாமல் போயிடும் என்று அவங்கள் சொல்லி சொல்லி எங்களை அழிக்கிறுங்கள்.

ஆனுல் ஒண்டு மட்டும் நிச்சயம். நாங்கள் ஆளுக்காள் சண்டை பிடிக்கிறதும் எங்கண்ட மக்களை நாங்களே அழிக்கிறதாலையும் எதிரிக்குத்தான் லாபம்.

எங்கண்ட இனத்தின்ர பிரச்சனைக்கு பின்னுலை கன சூட்சுமங்கள் இருக்கு பாருங்கோ. ஏகாதிபத்தியங்கள் தங்கட தங்கட ஆதிக்கங்களைப் பயன்படுத்துறதும் இதாலை எங்கண்ட மக்கள் அநியாயமாய் சாகிறதும் தொடர்ந்து கொண்டேயிருக்கு.

வெளிநாட்டு சக்திகள் எங்கட குழுக்களை பயன்படுத்தி தங்கட காரியத்தை சாதிக்குதுகள். பலியாகிறது தமிழ் இனம்.

இப்படியொரு நிலைமை தொடர்ந்தும் இப்படித் தான் இருக்கவேணுமா எண்டதை நீங்கள் யோசிச்சுப் பாருங்கோ. மக்களுடைய பலம் மகத்தானது எண்டதை வரலாறுகள் நிருபிச்சிருக்கு. காற்று எப்பவும் ஒரே திசையிலதான் அடிக்கிறேலை. வரலாறும் ஒரு நாள் மாறும். அப்ப எங்கள அடக்கி ஒடுக்கி வைச்சிருக்கிறவையும் அழிய வேண்டியது தான். இது வரலாற்று நியதி.

இண்டைக்கு எங்கட நாட்டில வாழுற மக்களுக்குள்ள உரிமையள் பறிக்கப்பட்டு மௌனமாய் அடிமையாய் வாழுற நிலைமை. சிங்கள இனவாத அரசு செய்த அடக்குமுறையிலும் பாக்க மோசமான ஓர் அடக்கு முறையில எங்கண்ட மக்கள் வாழுகினம். நாட்டில நடக்கிறதுகள் ஒரே குழப்பமாய் இருக்கிறது.

இந்த குழப்பமும் ஒரு விதத்தில தேவையானது தான். இதிலையிருந்து ஒரு தெளிவு மீள வரும். அப்ப எங்கட போராட்டமும் சரியான திசையை நோக்கி செல்லும். தொடர்ந்து சந்திப்பம்.

## யாழ் ஏரிக்கரை பத்திரிகை

விடுதலை! விடுதலை! ஐம்பது காசுக்கு விடுதலை!

பத்திரிகை படிப்பதென்பது கூட இன்று யாழ்ப்பாணத்தில் மிரட்டித்தான் நடைபெறுகிறது. "விடுதலை" என்ற பத்திரிகை ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தால் வெளியிடப்படுகிறது. இது தமிழ் ஈழத்தின் ஏரிக்கரைப் பத்திரிகை. (புல்லுக்குளம்). விடுதலையின் பிறப்பும் வளர்ப்பும் மிகவும் வேடிக்கையானது. "ஈழநாடு" பத்திரிகை மூடுவிழா கொண்டாடப்பட்டு அங்கிருந்து பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டு அவர்களின் எழுத்தில் வெளியாகிறது. அந்த பத்திரிகையாளர்கள் நாளைக்கு ஆட்சி மாறினுல் மரண தண்டனைக்கு உள்ளாகலாம்.

''விடுதலை'' யாருக்கு விடுதலை கொடுக்கப் போகிறதோ தெரியவில்லை. கண்டிப்பாக சில அப்பாவி அச்சக ஊழியர்களும் பத்திரிகையாளர்களும் விடுதலை அடைவார்கள். காரணம், விளக்கம் என்பன தேவையற்ற விடயங்கள். ''விடுதலை'' தற்போது பட்டிதொட்டியெங்கும் விற்பனை செய்யப்படுகிறது. எப்படி? ஒவ்வொரு தபால் சேவகரும் பத்து பத்திரிகையாவது விற்கவேண்டும். அவ்வாறே பொதுமக்களுடன் தொடர்பு கொண்டுள்ள அனைவருக்கும் இந்த 'சேவையில்' ஈடுபடும்படி பயமுறுத்தல். இவை தவிர சிறு பையன்களும் சந்திகளில் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். கண்டிப்பாக அந்த சிறுவர்கள் மிகவும் வறிய குடும்பங்களில் இருந்தே வந்திருப்பார்கள். நாளை அவர்களும் "துரோகி" என்று முத்திரை குத்தப்படலாம்.

இந்தச் சிறுவர்கள் தெருவில் போவோர் வருவோரை இடைமறித்து பத்திரிகையை நீட்டினுல் ஐம்பது சதம் கொடுத்து வாங்கியே தீரவேண்டும். ஏதாவது இசகுபிசகாக கதைத்தால் அல்லது வாங்க மறுத்தால் மோட்டார் சைக்கிளில் அல்லது வாகனங்களில் வரும் "அண்ணன்மாருக்கு" பத்திரிகை வாங்காத காரணத்தை சொல்லியே ஆகவேண்டும். காசு இல்லை என்றுல் உங்கள் பொக்கட், மணிபர்ஸ் என்பன திறந்து காட்டப்பட வேண்டும். காட்ட மறுத்தால் ''அபிசேகத்துக்கு'' தயாராக இருக்க வேண்டும். என்ன மாதிரி அபிசேகம் என்பதை அண்ணன்மார் தீர்மானிப்பார்கள். அவ்வாறு பரிசுத்தமடைந்த எவரும் அதனை வாழ்நாளில் மறக்க மாட்டார்கள். அது மாத்திரமல்ல, விடுதலையை விலைக்கு வாங்கு என்று எவருக்கும் உபதேசமும் செய்வர். அவர்பட்ட அனுபவங்கள் அப்படி. இதனுல் எனது நண்பர் கடைக்குப் போகும்போது விடுதலை வாசகனுனர். வீரகேசரி மறுநாள் தான் கிடைக்கிறது. துக்ளக் புலிகளால் தடை செய்யப்பட்டுள்ளது.

கனடாவிலும் தமிழ் பத்திரிகைகளுக்கு தடையுத்தரவுகளை ஒரு இனம் தெரியாத கோஷ்டி பிறப்பித்துள்ளதாக அறிகிறேம். கனடாவில் சட்டம் ஒழுங்கு என்பன எமது நாட்டை விட ஒழுங்காகப் பேணப்பட்டு வருகின்றன என்றே எண்ணுகிறேம். எனவே சம்பந்தப்பட்ட அந்த நபர்களை சட்டத்தின் காவலர்களிடம் ஒப்படைப்பது நல்லது என்றே படுகிறது. அவர்கள் இலங்கை போனுல் இஷ்டம் போல் தடையுத்தரவுகளைப் பிறப்பிக் கலாம்.

***கனக.செல்வச்சந்திரன்***

## எல் சல்வடோர் பாதிரிகள் கொலை தொடர்பாக விசாரனை

கிறிஸ்தவ குருமார் கொல்லப்பட்டதில் இராணுவத்தினருக்கு தொடர்பு.சென்ற வருடம் கார்த்திகை மாதம் எல் சல்வடோரில் ஆறு கிறிஸ்தவப் பாதிரிமார்களும் ,அவர்களின் வீட்டை பராமரிப்பவரும் ,அவரின் மகளும் படுகொலை செய்யப்பட்டது அறிந்ததே. இக்கொலைகள் அரசாங்கத்தின் இரகசிய இராணுவக் குழுக்களினுல் நடத்தப்பட்டிருக்கலாம் ஏற்கனவே ஊகங்கள் தெரிவிக்கபட்டிருந்தன.

தை மாதம் ஏழாம் திகதி ஜனுதிபதி கிறிஸ்டியானி நாட்டுக்கு ஆற்றிய உரையில் இக்கொலைகளுக்கும் இராணுவப் பிரிவுக்கும் தொடர்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறுர். மேலும் இக்கொலைகள் ஆத்திரமூட்டக் கூடியவை என வர்ணித்திருக்கிறுர். இக கொலைகளை யார் செய்தது என்பது பற்றி அவர் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இருந்தாலும் இக்கொலைகள் பற்றி விசாரிப்பதற்கு நேர்மை வாய்ந்த சட்டத்தரணிகளும் இராணுவ அதிகாரிகளும் கொண்ட குழு ஒன்றை தாம் நியமித்திருப்பதாகவும் அவர் கூறினுர்.

இக்கொலைகள் பற்றி விசாரிப்பதற்கு அமெரிக்கா, ஸ்கொட்லண்ட்யாட் நிபுணர்கள் வந்திருக்கிறுர்கள்.

## இலங்கையில் மழை மத்திய பிரதேசத்தில் வெள்ளம்

8.1 கொழும்பு

இலங்கையின் மத்திய பிரதேசங்களில் தொடர்ந்து பெய்த மழையினுல் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் வீடிழந்திருக்கிறுர்கள். மலைப்பிரதேசங்களில் மண்சரிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த வெள்ளத்தினுல் ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் இறந்திருக்கிறுர்கள். ஐந்து நாட்களாக தொடர்ந்து பெய்த மழையினுல் அகதிகளானவர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்திருக்கிறுர்கள்.

## யாழ் இளைஞர் சிலர் பெண்கள் மீது சேஷ்டை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்த தமிழ் இளைஞர்கள் வெள்ளவத்தைப் பகுதியில் இளம் பெண்களுடன் அங்கசேட்டைகளில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது. வடக்கிலிருந்து "விமானம்" மூலம் வந்தவர்களே இந்த சேஷ்டைகளில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது. இவர்களின் தொல்லைகள் பெரும்பாலும் தமிழ் மாணவிகளுடனேயே நடைபெறுகிறது. இந்த அண்மைக்கால நிகழ்ச்சிகளால் ரியுசன் முடிந்து வரும் பிள்ளைகளை பெற்றேரும் சகோதரரும் கூட்டிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாம். இவர்களை எச்சரிக்கச் சென்ற ஒரு சகோதரருக்கு "தாம் யார் எனத் தெரியுமா?" என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டதாக வாரப் பத்திரிகையான திசை செய்தி வெளியிட்டிருக்கிறது.



படிப்பகம்

# போபால் வாயு விபத்து பாதிக்கப்பட்டோர்

8.1 போபால்

போபால் வாயு விபத்தில் பாதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கானவர்கள் வெறும் வாளிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தங்கள் பிரதேசங்களில் குடிநீர் வசதிகள் கோரி அவர்கள் இந்திய உதவிப்பிரதமர் தேவிலால் சென்ற வாகன வரிசையை தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். தேவிலால் விஜயம் செய்த 12 இடங்களில் இவர்கள் மறியல் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். தான் பதவி ஏற்றபின் போபாலுக்கு தேவிலால் செய்யும் முதல் விஜயம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. போபால் விபத்து நடந்து ஐந்தாவது நிறைவின்பின் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது. போபால் விபத்தில் 3598 பேர் இறந்ததுடன் இருபதாயிரம் பேர் காயமடைந்தனர். யூனியன் கார்பைட் நிறுவனம் நடத்தி வந்த கிருமிநாசினி தொழிற்சாலையில் இருந்து மீதைல் ஐசோசயனேட் வாயு வெளியேறியதில் இருந்து இந்த விபத்து நடந்தது.தனது ஒரு மணி நேரப் பிரயாணத்தின் போது பல தடவை தேவிலால் தனது வாகனத்தை நிறுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களுடன் உரையாடினார்.

பாதிக்கப்பட்டவர்கள் தமது மறுவாழ்வுக்கான திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இந்த நிலை மிகவும் வருந்தத்தக்கது, மக்கள் மாநில அரசுக்கு எதிராக ஒற்றுமையாக போராடி இருந்தால் மக்களுக்கு அந்த நிலை வந்திருக்காது என்று தேவிலால் கருத்து தெரிவித்தார். மாநில அரசு இந்திரா காங்கிரசின் கைக்குள் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் விவசாய அமைச்சருமான தேவிலால் மறுவாழ்வுத் திட்டங்களை துரிதப்படுத்துவதாக உறுதியளித்தார். ஆனால் தான் எப்படி அதை செய்வார் என்பது பற்றி அவர் தெரிவிக்கவில்லை.

யூனியன் கார்பைட் இந்த விபத்துக்கு நஷ்ட ஈடாக 470 மில்லியன் டொலர் வழங்கியிருந்தது.

# ஜே.வி.பி தாக்குதல் வழிகளை மாற்றியுள்ளது

ஜனதா விமுக்தி பெரமுனையினர் தமது தாக்குதல் வழிகளை மாற்றியுள்ளதாக ரஞ்சன் விஜேரத்தின அறிவித்திருக்கிறார். ரஞ்சன் விஜேரத்தின பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தங்கள் உளவு பிரிவுக்கு கிடைத்த செய்திகளின்படி ஜே.வி.பியினர் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி அரசியல்வாதிகளைக் கடத்தவும் அரசியல் கட்சிகள், தொழிற சங்கங்களுக்குள் ஊடுருவவும் இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை நிறுத்துவதற்காக பிரச்சாரம் செய்யவும் ஜனநாயகத்துக்கு எதிராக புறப்படும் பொதுமக்களை கொல்லவும் திட்டமிட்டிருப்பதாக கூறியிருக்கிறார்.

பல முக்கியஸ்தர்கள் அரசை கவிழ்ப்பதற்கான ஜே.வி.பியினரின் முயற்சிக்கு ஆதரவளிப்பதாகவும் இதுவரை சந்தேகிக்கப்படாத பலர் இந்த அமைப்பின் பின்னால் இருந்திருக்கிறார்கள் எனவும் இந்த நடவடிக்கையில் வெளிநாட்டில் உள்ள பலரும் அங்கம் வகித்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

இந்த சக்திகள் இந்தியா வெளியேறும் என எப்போதுமே எதிர்பார்க்கவில்லை, வடகிழக்கு பிரச்சனைக்கு புரிந்துணர்வினாலும் நல லெண்ணத்தினாலும் தீர்வு காணப்படும் எனவும் நினைக்கவில்லை என்றும் அவர் குறறம் சாட்டினார்.

# இந்தியாவில் தேர்தல் சீர்திருத்தங்கள்

9.1 புது டில்லி

இந்தியாவில் தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வர இந்திய அரசியல் கட்சிகள் உடன்பட்டிருக்கின்றன. கடந்த நாற்பதாண்டு கால தேர்தல் வரலாற்றில் அதிகமான பொதுமக்கள் சென்ற தேர்தலில் கொல்லப்பட்டிருந்தார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும் என வி.பி.சிங் விடுத்த கோரிக்கையை ஏற்று சகல கட்சிகளும் ஒரு குழு ஒன்றை அமைத்துள்ளன. இந்தியாவின் 22 கட்சிகளுக்கும் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டு தேர்தல் மோசடிகளை கண்டுபிடித்தல், தொழில் அதிபர்களின் ஊடுருவலைத் தவிர்த்தல், திட்டமிட்ட குற்றச் செயல்களை நிறுத்தல் போன்றவற்றை நிறுத்துவது பற்றி ஆலோசனை நடத்தினார்கள்.

அங்கு பேசிய வி.பி.சிங் எல்லோரும் பங்குபற்றினால் அன்றி எல்லோருமே பாதிக்கப்படுவார்கள் என்று கூறினார். இந்த மாநாட்டின் பின் புதிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. அடுத்த சர்வகட்சி மாநாட்டில் இந்த குழுவின் முடிவுகள் விவாதிக்கப்படும்.

கடந்த தேர்தல் பிரசாரத்தின் போது தேர்தல் முறைகளில் சீர்திருத்தம் கொண்டு வரப்படும் என வி.பி.சிங் உறுதி அளித்திருந்தார். கடந்த தேர்தலில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. மோசடி காரணமாக பல இடங்களில் மீண்டும் வாக்களிப்பு நடத்தப்பட்டது. பல வாக்குச்சாவடிகளில் காடையர்களின் உதவியுடன் பெட்டிகள் கைப்பற்றப்பட்டு ஆதரவான வாக்குகள் திணிக்கப்பட்டிருந்தன. வட இந்தியாவில் பல அரசியல் வாதிகள் காடையர்களுக்கு பணம் செலுத்தி தேர்தலைக் குழப்பியிருந்தனர். பல தொகுதிகளில் பிரபல குண்டர்கள் போட்டியிட்டிருந்தனர். சட்டரீதியாக தொழில் அதிபர்கள் நிதி வழங்குவது தடை செய்யப்பட்டபோதும் சமீபத்திய பொருளாதார நெருக்கடிகளாலும் வளர்ந்து வரும் தேர்தல் செலவுகளாலும் இரகசியமான முறையில் நிதி உதவியை அரசியல் வாதிகள் பெற்று வருகிறார்கள். அரசியல் கட்சிகள் சட்டரீதியாக தங்கள் தேர்தல் செலவீனங்களை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் இல்லாததால் இதுபற்றிய விடயங்கள் வெளிவருவதில்லை.

இந்த சர்வகட்சி மாநாட்டில் சாவடிகளைக் கைப்பற்றுவதைத் தடுப்பது பற்றியும் தேர்தலில் போட்டியிடுவோரின் தகுதிகள் பற்றியும் தேர்தல் அதிகாரிகளை நியமிப்பது பற்றியும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

# காஷ்மீரில் கலவரங்கள்

8.1 சிறிநகர்

காஷ்மீரில் பிரிவினைவாதிகளின் கலவரங்களால் குறைந்தது 13 கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த கலவரங்களை அடக்க பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததுடன் [illegible]பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இதில் [illegible] காயமடைந்திருக்கின்றனர்.

இந்தியாவின் வடபகுதி [illegible] காஷ்மீரின் தலைநகரமான [illegible] இறந்ததாக மாநில [illegible] மாநில அரசு [illegible]துள்ளது. அத்துடன் இருபத்து நாலு மணிநேர ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் கலகம் விளைவிப்போரை கண்ட இடத்தில் சுடுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஜம்மு காஷ்மீரில் ஏற்கனவே அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டபின் பல ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் வந்து கலகம் விளைவித்தனர். ஊரடங்கு சட்ட நேரம் பொலிசார் அடக்குமுறையில் ஈடுபட்டதாகவும் தங்கள் தீவிரவாத தலைவர் கைது செய்யப்பட்டதாகவும் குற்றம் சாட்டியே ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.

சோப்பூர், ஆனந்த்நாக், பரமுல்ல ஆகிய இடங்களில் கடும் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசார் மீது கற்கள், போத்தல்கள் என்பவற்றை வீசியதுடன் "இந்திய நாய்களே திரும்பிப் போங்கள்" எனக் கோஷமிட்டனர். மோசமான வன்செயல்கள் நகரின் மையப்பகுதிகளில் இடம் பெற்றன. இளைஞர்கள் தடுப்புகளைப் பாவித்து போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தனர். அத்துடன் வியாபார நிலையங்களை மூடச் செய்தனர். ஒரு அரச கைத்தொழில் நிறுவனத்துக்கும் பெண்கள் பாடசாலைக் கட்டடத்துக்கும் தீ வைத்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பெண் உட்பட 10 பேர் இறந்துள்ளனர். இருபது பொலிசாரும் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களும் காயமடைந்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களும் திருப்பிச் சுட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சோப்பூரிலும் கற்களை எறிந்த கூட்டத்தினர் மீது பொலிசார் சுட்டதில் இருவர் இறந்ததாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்களுக்கும் கட்டடங்களுக்கும் தீ வைத்ததாகவும் தெரியவருகிறது. ஆனந்தநாக்கிலும் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் நகரின் பிரதான வைத்திய அதிகாரியின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன.

10.1

ஊரடங்குச்சட்டத்தையும் பொருட்படுத்தாமல் ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியே வந்து பொலிசாருடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இதில் இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள். 800க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தில் இரண்டு பகுதியினரும் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஒரு பொலிசாரும் வேறு ஒருவரும் கொல்லப்பட்டனர். இதில் முப்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்திருக்கிறார்கள்.

ஐ.நா சபையில் 1949 தை மாதம் ஐந்தாம் திகதி காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளப்பட்டதை நினைவு கூருமுகமாக நடத்தப்பட்ட காஷ்மீர் தினத்தை கொண்டாடாமல் தடுக்கவே இந்த ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டது.

# இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு?

இந்தியாவின் தென்பகுதியான கோலார் மாவட்டத்தில் உள்ள இருபது லட்சம் மக்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் போஷாக்கின்றி இருக்கின்றனர். இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த போதிலும் இந்த நிலை மாறவில்லை. இந்தியாவின் இந்த நிலையால் கிராமப்புறங்களில் உள்ள தொழிலாளர்களும் சிறு தோட்டக்காரர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் பசுமைப் புரட்சியால் பெரும் அழிவு என்ற நிலை மாறி இந்தியா உணவுற்பத்தியில் தன்னிறைவு கண்டிருக்கிறது. ஆனால் அதன்பயனை முழுப்பேரும் அனுபவிக்க முடியவில்லை. முன்பு இந்திய விவசாயிகள் புரதமும் உயிர்ச்சத்துக்களும் நிறைந்த உணவை உற்பத்தி செய்வதை விட்டு தற்போது ஏற்றுமதி செய்யக்கூடியதும் லாபம் தரக்கூடியதுமான பயிர்களை பயிரிட்டு வருகிறார்கள். முன்பு விவசாயிகள் பருப்பு போன்றவற்றையே பயிரிட்டு வந்தனர். ஆனால் தற்போது அவர்கள் உருளைக்கிழங்கு போன்றவற்றையே பயிரிட்டு லாபம் தேட முனைகின்றனர். அரிசியை விட பருப்பில் நான்கு மடங்கு புரதமும், நூற்றுக்கணக்கான மடங்கு உயிர்ச்சத்துகளும் மூன்று மடங்கு இரும்புச்சத்தும் ஐந்து மடங்கு கல்சியமும் உண்டு. இருந்தாலும் அரிசியே முக்கிய பயிராகப் பயிரிடப்படுகிறது.

இருபது வருடங்களுக்கு முன் உலக நாடுகள் இந்தியாவில் பெரும் பஞ்சம் ஏற்படும் என கூறியிருந்தன. எண்பதுகளின் ஆரம்பப்பகுதியில் லட்சக் கணக்கானவர்கள் பட்டினியாலும் சனத் தொகை அதிகரிப்பாலும் இறப்பார்கள் என்று ஐக்கிய நாடுகள் நிறுவனமும் அமெரிக்க அபிவிருத்தி நிறுவனமும் கூறியிருந்தன. ஆனால் இந்தியா தற்போது நெல், கோதுமை ஏற்றுமதியில் முன்னணி வகிக்கிறது. இந்தியாவின் விவசாய அபிவிருத்தித் திட்டங்களால் பஞ்சாப் போன்ற மாநிலங்கள் பெருமளவு உணவுற்பத்தியில் ஈடுபட்டன. அதனால் போதிய உணவு கிடைத்ததுடன் ஏற்றுமதி செய்யக் கூடியதாகவும் இருந்தது. எனவே இந்தியாவின் தற்போதைய போசாக்கின்மைக்கு காரணம் உணவுத்தட்டுப்பாடல்ல, மக்களிடம் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு பணம் இல்லாததே. வரட்சிப் பிரதேசங்களிலும் போதிய உணவு விற்பனைக்காக இருந்தாலும் மக்களிடம் வாங்குவதற்கான சக்தி இல்லை.

மாநில அரசுகளும் மத்திய அரசும் இலவசமாக விதைகளும் பசளைகளும் வழங்கி விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. கோலார் பகுதியில் பதினொரு வீதமான நிலமே நீர்ப்பாசன வசதியைப் பெற்றிருக்கிறது. மீதி நிலங்கள் மழையை நம்பியே பயிரிடப்படுகின்றன. எவ்வாறு இந்தியா விவசாய ரீதியில் வளர்ச்சி அடைந்தாலும் ஏழைகள் இன்னமும் பட்டினியாலேயே இறப்பர்.

# நேபாளத்தின் முடிக்குரிய இளவரசர்

3.1 காத்மண்டு

நேபாளத்தின் முடிக்குரிய இளவரசர் திபேந்திரா பிர் பிக்ரம் ஷா தேவ் அரசுகட்டிலுக்கு தகுதியானதை ஒட்டி நடத்தப்பட்ட விழாவில் அவர் குதிரைகள் பூட்டிய வண்டியில் நகரை வலம் வந்தார்.

லண்டனில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் இளவரசர் நேபாள இராணுவத்தின் பிரதம கேணலாக பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். உலகின் ஒரே இந்து இராச்சியமான நேபாளம் உலகில் எஞ்சியிருக்கும் அரச குடும்பங்களில் ஒன்றாகும். மன்னர் எந்த சட்டத்தையும் ரத்து செய்யவோ, எந்த பாராளுமன்ற உறுப்பினரை நீக்கவோ, அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவோ முடியும். 18 வயதான இளவரசரின் கொண்டாட்டத்தை ஒட்டி ஓய்வு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இதை ஒட்டி தபால் தலைகளும் நாணயங்களும் வெளியிடப்பட்டிருந்தன. அரண் மனையில் விருந்தினர்கள் முன்னிலையில் நடைபெற்ற வைபவத்தை அடுத்து இளவரசர் ஆறு குதிரைகள் பூட்டிய வண்டியில் விநாயகர் ஆலயத்துக்கு சென்று வழிபட்டார். குளிரான காலநிலையிலும் நேபாளிகளும் உல்லாசப் பிரயாணிகளும் திபேந்திராவை வாழ்த்தக் கூடியிருந்தனர். தற்போதைய மன்னர் பிரேந்திராவின் மூத்த புதல்வரான இவர் தனது தந்தை இல்லாதபோது ராஜீய கடமைகளை கவனிப்பார். இவர் பிரிதிவி நாயரன் ஷா 19 ம் நூற்றுண்டில் தொடங்கிய ஆட்சியில் 11வது முடிக்குரிய இளவரசராவர். அத்துடன் இவர் ராஜய் சபையில் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். நேபாளத்தின் மொத்த பரப்பு 54 362 சதுர மைல்களாகும். உலகின் உயரமான எட்டு மலைகள் நேபாளத்திலேயே உண்டு.

இருப்பினும் புதிய இந்திய அரசுடன் நேபாளம் தனது உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் என நம்பப்படுகிறது. முன்பு நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள உறவுகளில் பலத்த விரிசல் ஏற்பட்டிருந்தது. கடந்த கார்த்திகை மாதம் சீன பிரதமர் நேபாளத்துக்கு விஜயம் செய்திருந்தார். உலகின் வறிய பத்து நாடுகளில் நேபாளமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. தனது முக்கியமான பொருட்களுக்கு நேபாளம் இந்தியாவையே நம்பியிருக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையில் சச்சரவு தொடங்கியதை அடுத்து நேபாளம் சீனாவிடம் உதவி கோரியிருந்தது. இது இந்தியாவுக்கு தலையிடியை ஏற்படுத்தியிருந்தது.

www.padippakam.com

# மேற்குல செய்தி நிறுவனங்கள் எவ்வாறு செய்திகளை திரிபு படுத்துகின்றன.......

செறிந்த சொற்கள் மக்களுக்கு எப்படிச் சிந்திப்பதெனச் சொல்லின!

கடந்த சில வாரங்களாக வட அமெரிக்க செய்தி நிறுவனங்கள், எங்களுக்கு பலம் வாய்ந்த மனிதர் (Strongman), சர்வாதிகாரிகள் (Dictators), கொடுங்கோலர்கள் (Tyrants), கூட்டாளிகள் (Cronies), கண் மூடித்தனமான விசுவாசம் கொண்டவர்கள் (Henchmen) பற்றி அளவுக்கதிமான எடுத்தியம்பின. துரதிஷ்டவசமாக அவர்கள் இச்சொற்களுக்கு என்ன அர்த்தம் என்று கூறவில்லை. நிக்கொலாய் செளசெஸ்கு ஒரு கொடுங்கோலன் என்றும் நொரியேகா ஒரு பலம் வாய்ந்த மனிதன் என்றும் எங்களுக்கு சொல்லப்பட்டது. இருந்தும் நாங்கள் இதுபற்றி ஒரு குழம்பிய நிலையிலேயே விடப்பட்டிருந்தோம். அதிகமாக இவர்களெல்லாம் சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். டெங்சியாவோ பிங், சவுதி மன்னர் பாத் ஆகியோருக்கும் சகல நிறைவேற்று அதிகாரங்களும் இருந்தபோதும் அவர்கள் அப்படி வர்ணிக்கப்படாமல் ஏன் நொரியேகா மட்டும் ஒரு பலம் வாய்ந்த மனிதர் என வர்ணிக்கப்படுகிறார்? இதைவிட சில தசாப்தங்களாக ருமேனியாவை ஆண்ட சர்வாதிகாரி செளசெஸ்கு ஏன் பதவிக்காலத்தின் கடைசி நேரத்தில் மட்டும் ஒரு கொடுங்கோலராக வர்ணிக்கப்பட்டார்?

ருமேனியாவை இருபத்திரண்டு வருடங்களாக சகல நிறைவேற்று அதிகாரங்களுடன் ஆண்ட செளசெஸ்கு, கொடுங்கோலன் அல்லது சர்வாதிகாரி என்று முத்திரை குத்தப்படுவது கடைசி சில வாரங்கள் வரை தவிர்க்கப்பட்டிருந்தது. 78 இல் ரஷ்யாவுக்கு "எதிரான கருத்தைக் கொண்ட மனிதராக" இவர் வர்ணிக்கப்பட்டார். நியு யோர்க் டைம்ஸ் பத்திரிகை இவரை "சுதந்திர உணர்வு கொண்ட துணிச்சலான ருமேனியன்" என்று வர்ணித்திருந்திருந்தது. ஆனால் 89 கிறிஸ்மஸ் நேரத்தில் சர்வாதிகாரியாகவும் கொடுங்கோலராகவும் அதே இவர் முன்பக்கத் தலையங்கங்களில் வர்ணிக்கப்பட்டார்.

அதே நேரத்தில் இந்த செய்தி நிறுவனங்கள் நொரியேகாவை "ஆயுதக்குழுத்தலைவன் (Gangster), காடையன் (Thug), சர்வாதிகாரி என்றும் பட்டப்பெயர்களால் அழைத்துக் கொண்டன. ஆனால் அதே மாதிரியான டெங்சியாவோ பிங்கை யாரும் பலம் வாய்ந்த மனிதர் என்று வர்ணித்ததை நாம் கேட்டதில்லை. ஏனெனில் அமெரிக்காவின் நீண்ட கால நண்பர். உண்மையில் 78 ஆம் ஆண்டின் மனிதர் என்று டைம் சஞ்சிகை தெரிவு செய்திருந்ததுடன் அவரை "புதிய சீனாவின் சிந்தனைவாதி" என்று குறிப்பிட்டிருந்தது.

பலம் வாய்ந்த மனிதர் என்ற சொல் வெறுப்புணர்வைத் தவிர வேறெந்த தகவலையும் தரவில்லை. இந்த செய்தி நிறுவனங்களால் பாவிக்கப்படும் எண்ணற்ற சொற்களில் இதுவும் ஒன்று. உதாரணத்துக்கு டைம் சஞ்சிகை விசுவாசிகள் பற்றியும் நெருங்கிய நண்பர்கள் பற்றியும் அதிகமாக தெரிவிக்க விரும்பும். பொதுவாக செய்தி நிறுவனங்களைப் பொறுத்தவரை அவற்றினால் மதிக்கப்படுபவர்களுக்கு நெருங்கிய நண்பர்கள், ஆதரவாளர்கள் மட்டுமே உண்டு. அதே நேரம் செய்தி நிறுவனங்களுக்கு விரும்பத் தகாதவர்களுக்கு கூட்டாளிகளும் விசுவாசிகளுமே உண்டு.

இப்படியான சொற்கள் மரியாதைகளையும் மதிப்புகளையும் வெளிப்படுத்தும். மற்றும் சில அருவருக்கத்தக்க அல்லது அவமதிப்பு போன்றவற்றை வெளிப்படுத்தி நிற்கும். ஆகவே ஒரு பழமையான மதவாதி, ஒரு ஆழமான மதநம்பிக்கை கொண்டவராகவும் (ரீகன் போல் மதிப்புக்குரியவராகவோ..) அல்லது மதவெறி கொண்டவராகவும் (கொமேனி போல் அவமதிப்புக்குரியவராகவோ) சித்தரிக்கப்படலாம். இப்படியான வார்த்தைப் பிரயோகங்கள் நடவடிக்கைகளையோ நம்பிக்கைகளையோ சொல்லும்போது மதிப்புக்குரிய அல்லது அவமதிப்புக்குரிய எண்ணங்களைத் தாங்கி நிற்கும். எனவே பாப்பானவர் பேசினால் அது உணர்ச்சி பூர்வமான உரையாகவும் டேனியல் ஒட்டேகா உரை நிகழ்த்தினால் கோபமடைந்த பிதற்றலாகவும் வர்ணிக்கப்படுகிறது. மாகிரட் தச்சர் இரும்புப் பெண்ணாக வர்ணிக்கப்படும் போது (ஜே!) எறிக் கொனேக்கர் விட்டுக்கொடுக்காத தலைவராகவும் (ஊ!) சித்தரிக்கப்படுகிறார். கனடிய தொலைக்காட்சி நிறுவனத்தின் கருத்துப்படி நொரியேகா வத்திக்கான் தூதுவரகத்தில் ஒடி ஒளித்தபோது (ஊ!) சீன அதிருப்தியாளர் பாங் லிசி அமெரிக்கத் தூதுவரகத்தில் அடைக்கலம் (ஜே!) வழங்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.

இச்செய்தி நிறுவனங்கள் இது போன்ற (ஜே, ஊ) இரண்டு வித சொற்களையும் ஒரே வசனத்தில் பாவிக்கின்றன. என்.பி. சி தெரிவித்த கருத்துப்படி நொரியேகா வசதியான வாழ்க்கையின் (ஊ!) பொறிகளுக்குள் (ஊ) சிக்கி (ஊ) தனது நாட்டின் (ஜே) செல்வத்தை (ஊ) சூறையாடுவதில் (ஊ) கண்ணாயிருந்தார். உலகெங்கும் உள்ள அரசியல் தலைவர்கள் வாழ்ந்த வசதியான வாழ்க்கை போல் நொரியேகாவும் வாழ்ந்தார் எனக்காட்ட இதில் கூடிய அவமதிப்புக்குரிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களாக பத்திரிகையாளர்களும் அளவுக்கதிகமான துர்வார்த்தைகளை அதிகம் பிரயோகித்து வருகின்றன. அதில் மோசமானதாக அமெரிக்க தொலைக்காட்சியொன்றில் செளசெஸ்கு கிராமங்களை தரைமட்டமாக்கியதால் ஒரு பைத்தியக்காரன் என வர்ணிக்கப்பட்டிருந்தார். சிலநேரங்களில் செளசெஸ்கு ஒரு பைத்தியக்காரனாக இருக்கலாம். ஆனால் கென்னடி, ஜோன்சன், நிக்சன் போன்றோர் ஐம்பதாயிரம் இளைஞர்களைச் சாவதற்காக வியட்னாமிற்கு அனுப்பியபோது "சர்ச்சைக்குரிய" என்ற பதத்தை வேறு எதனையும் அவர்கள் பாவிக்கவில்லை.

இந்த இழிசொற்கள் அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை ஒப்பீட்டளவில் யாரையும் அதிகமாக புண்படுத்தாமல் விட்டாலும் சில நேரங்களில் நாடுகளையோ, கண்டங்களையோ முழுமையாக தவறாக வர்ணிக்க இந்த வார்த்தைகள் பயன்பட்டிருக்கின்றன. அமெரிக்கத் தொலைக்காட்சி லெபனான் யுத்தத்தை ''அறிவற்ற சண்டை'' என்று கூறியிருந்ததன் மூலம் இப்பிரதேசத்தில் எந்த வித மோதலும் இல்லை என்றும் லெபனானிய மக்கள் ஒருவரை ஒருவர் கொல்வதில் மகிழ்ச்சியடைகிறார்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தது.

அதைவிட அதே தொலைக்காட்சி அமெரிக்கா, பனாமாவில் ஆக்கிரமிப்புச் செய்ததை அமெரிக்க நாடுகள் நிறுவனம் கண்டித்ததற்காக லத்தீன் அமெரிக்க நாடுகளை "விசாரணையின்றி தூக்கிலிடும் காடையர்" என்று கூறியிருந்தது. இந்த வார்த்தைப் பிரயோகத்துக்கு மற்ற பக்கமும் உண்டு. வேறு நாடுகள் ஆக்கிரமிப்புச் செய்யும் போது அமெரிக்கா அவர்களுடன் சேர்ந்து அதைக் கண்டித்தால் "பலத்த எதிர்ப்பு" என்று வர்ணிக்கப்படுகிறது.

உண்மையில் இந்த சொற்கள் செய்திகளை மேலும் தூண்டிவிடுகின்றன. இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் உண்மை நிலையைக் கூறினாலும் வாசிப்பவர்கள் மனதில் தவறான உணர்வுகளையும் கருத்துகளையும் செலுத்தி விடுகின்றன. இக்கருத்துக்கள் அமெரிக்க உள்நாட்டு அலுவலகத்தின் பிரதிபலிப்புகளே. ஏன் செய்தி நிறுவனங்கள் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை எம்மிடம் சொல்லி எம்மை சிந்தித்து முடிவு எடுக்க விடாமல் எம்மேல் முடிவுகளைத் திணிக்கின்றன? எப்போது செய்தி நிறுவனங்கள் எங்களை எப்படிச் சிந்திக்கவேண்டும் என்று கூறுகின்றனவோ அப்போது அவை செய்தி வழங்கும் நிலையிலிருந்து பிரசாரம் என்ற நிலைப்பாட்டுக்கு மாறுகின்றன.

(லோறன்ஸ் புருனர் ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றிலிருந்து)

# இந்திய_நேபாள புதிய ஒப்பந்தம்

6.1 புது டில்லி

இந்தியாவும் நேபாளமும் புதிய ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட முன்வந்துள்ளன. கடந்த ராஜீவ் அரசின் போது நேபாளத்துடன் சீர்கெட்டிருந்த வர்த்தகத் தொடர்புகளை சீர்படுத்துவதற்காக நேபாள அமைச்சர் சைலேந்திர உபாத்தியாய் இந்தியாவுக்கு வருகை தந்திருக்கிறார். இவர் கடந்த புதன்கிழமையும் வியாழக்கிழமையும் இந்திய அதிகாரிகளுடனும் பிரதமர் வி.பி. சிங்குடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். கடந்த பங்குனி 87 இல் ஆரம்பித்த வர்த்தக தடைகளை அடுத்து இந்த பேச்சுவார்த்தை இடம் பெற்றது. இரு நாடுகளும் விடுத்த கூட்டறிக்கையில் பேச்சு வார்த்தைகள் சுமுகமான முறையில் நடைபெற்றதாகவும் பரஸ்பர புரிந்துணர்வுகள் மேலோங்கியிருந்ததாகவும் இரு சாராருக்குமான பிரச்சனைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்றும் எதிர்கால உறவுகளும் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த காலத்தில் நடைபெற்ற வர்த்தக முட்டுக்கட்டைகள் குறித்து இந்தியா வருத்தம் தெரிவித்திருக்கிறது. நேபாள வெளிநாட்டமைச்சருக்கு அளித்த விருந்தொன்றில் பேசிய குஜரால் சமீபகாலத்தில் இரு நாட்டு உறவும் பாதிக்கப்பட்டது என்றும் இரு சாராருக்கும் நன்மை தரக்கூடியதும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதுமான தீர்வு ஒன்றை விரைவில் அடைய தாங்கள் விரும்புவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

பூட்டான் மன்னரும் வருகிற சனிக்கிழமை உத்தியோகப்பற்றற்ற விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வருகிறார். இவர் வி.பி.சிங், இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

அத்துடன் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளை சீர்படுத்துவதற்காக பாகிஸ்தான் ராஜதந்திரி இந்தியா வருகை தந்திருக்கிறார். பாகிஸ்தான் ராஜதந்திரி அப்துல் சத்தார் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியா விஜயம் செய்தார்.

# சீக்கிய பாராளுமன்ற உறுப்பினர் கொலை

3.1 புது டில்லி

சமீபத்தில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட சீக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சடலம் ஒரு ஆற்றினுள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து நாட்களாக காணாமல் போயிருந்த இவரது தலைப்பாகை, சப்பாத்து மற்றும் பொருட்கள் ஆற்றோரமாகக் காணப்பட்டதை அடுத்து இவரது சடலத்தை தேடும் முயற்சிகள் தீவிரமடைந்தன. இவரது வீட்டிற்கு அருகில் உள்ள ஒரு ஆற்றிலேயே இவரது உடல் கண்டெடுக்கப்பட்டது.

கடந்த தேர்தலில் 55 வயதான ஜக்தேவ்சிங் குடியான் என்னும் இந்த பாராளுமன்ற உறுப்பினர் இறந்ததற்கான காரணம் இது வரை தெரியவில்லை. இவர் சீக்கிய தீவிரவாதிகளால் கடந்த தேர்தலில் ஆதரிக்கப்பட்டிருந்தார். இவரது குடும்பத்தினர் இவர் சீக்கிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார் என்று புகார் செய்திருந்தனர். ஆனால் பின்பு வெளியே சென்ற அவர் திரும்பவில்லை என அவர்கள் தெரிவித்தனர். அகாலிதள் கட்சியின் உறுப்பினரான இவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்த நால்வரில் ஒருவர் ஆவர். இதனால் இவர் சிக்கியத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. தங்கள் கோரிக்கைகளுக்கு பிரதமர் வி.பி.சிங் இணங்காத வரைக்கும் தங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யக்கூடாது என சீக்கியத் தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இவர் தனது குடும்பத்தில் இருந்த காணித்தகராறு காரணமாக தற்கொலை செய்திருக்கலாம் என்று சிலர் கருத்து தெரிவித்த போதிலும் இவரது கட்சியினர் இவர் இவரது எதிரிகளால் கொல்லப பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர். இவரது மறைவு பலத்த மோதலை பஞ்சாப்பில் ஏற்படுத்தியிருக்கக் கூடும். இவரது கட்சியினர் இவரைத் தேடுவதற்கான முயற்சிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித திருந்தனர். அத்துடன் சீக்கிய மாணவர் பேரவை கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவித்திருந்தது.

பின்பு வந்த செய்திகளின்படி சீக்கிய தீவிரவாதிகள் இவரது மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுள்ளது. மரணவிசாரணையின் போது கொலை நடந்ததற்காக எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. எந்த வித காயங்களும் அவரது உடலில் காணப்படவில்லை. கழுத்தில் எந்த காயங்களும் இல்லையாதலால் கழுத்து நெரித்து கொல்லப்பட்டதற்கான ஆதாரங்களும் கிடைக்கவில்லை.


இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷேவ்
This newspaper is published by Georgicka communications.
Editor: George R,Ckrhushchev
Georgicka Communications,
P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7. Tel: (416) 920 9081
உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். ஆக்கங்கள் சம்பந்தமான தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் அளிக்கப்பட மாட்டாது. படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.


உது அதர்மம் உதை பார்த்துக் கொண்டிரேன் என்று தீர்மானித்து தர்மத்திற்காக கொடுக்குக் கட்டி வாள் எடுத்தவனுக்கு இதில் சாகவேண்டி வருமென்ற பயமோ,வெல்ல வேணும் என்பதோ அல்ல யோசனை செய்யவேண்டும் என்பதே முக்கியம்

தனுர்வேத வாக்கியம்



படிப்பகம்

www.padippakam.com

அனைத்து தமிழ்
தட்டெழுத்து வேலைகளுக்கும்
உங்கள் வியாபாரம் முன்னேற

☆ கடிதத் தலைப்புகள்
**LETTER HEAD**

☆ வியாபார அறிமுக அட்டை
**VISTING CARD**

☆ விளம்பர துண்டுப் பிரசுரங்கள்
**FLYERS**

✤ உங்களுக்குத் தேவையான பொழுது
உங்கள் கரங்களில்

அழகுற அமைத்துக்கொள்ள

✤ தொலைபேசி இல ✤
**963 9782**

---

உ
சிவமயம்
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுக்கில வருடம் தை திங்கள் 4ம்நாள் (17.1.1990) புதன்கிழமை முற்பகல் 10.10 மணி முதல் 11.40 மணி வரையுள்ள மீனலக்கின சுபவேளையில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது கனிஷ்ட புத்திரி |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| அருணன் | கௌசலா |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணம் செய்ய பெரியோரால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால், அவ்வமையம் மணமகள் இல்லத்தில்நடைபெறும் திருமண வைபவத்தில் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து சகல சடங்குகளிலும் பங்குபற்றி தம்பதிகளை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புரிமை தழுவி அழைக்கிறோம்.

திருமதி.வாலாம்பிகை அருள்லிங்கம்
54/12, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்

திருமதி.யோகீஸ்வரி.குணசிங்கம்
93/21, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

---

UG


# உதயாஸ்
# UTHAYAS

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
வாசனைத் திரவியங்கள், பழஜாம், பழரசங்கள்,
எவர்சில்வர் பாத்திரங்கள், குடம், குத்துவிளக்குகள்,
சிறந்த ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, மரக்கறி வகைகள்

கிறிஸ்மஸ்
பண்டிகையை
ஒட்டி விசேட
மலிவு விற்பனை

☆ $30.00 க்கு மேற்பட்ட
கொள்வனவிற்கு
இலவச வினியோகம்

5010 Steeles Ave West #1
(Steeles/Kipling)
Etobicoke
தொலைபேசி: 740 7971




9.2

---

# பரடைஸ் ஒவ் சிலோன்

## இலங்கை இந்திய உணவகம்

உங்கள் நாவுக்கு ருசியாக சுடச்சுட
பிட்டு, இடியப்பம், தோசை, இட்லி, கொத்துரொட்டி, பிரியாணி, சோறு, கறி மற்றும் சுவையான சிற்றுண்டி வகைகளுக்கு

சகல வைபவங்களுக்குமான ஓடர்களும் செய்து கொடுக்கப்படும்

7 நாட்களும் திறந்திருக்கும்

**Open : 11Am to 11Pm**

***Paradise of Ceylon***
**(SRI LANKAN AND INDIAN CUISINE)**
**VEGETARIAN & NON VEGETARIAN**
**1303 BLOOR ST.W, TORONTO**
(416) 538-3885
*Lansdowne Subway* க்கு அருகாமையில்
*Lansdowne/Bloor*

23.2

---

J VC C

தமிழ் ரசிகர்களுக்கு ஜெயா அன் பிறதர்ஸ் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது

J AB B

தை 12, 13, 14 திகதிகளில்
ராஜா சினிமாவில் (Christie subway)
பிரபு, சீதா, தாராசிங், ஜனகராஜ்
நடித்த
தியாகராஜனின்

# வெற்றி மேல் வெற்றி

தமிழ் திரையுலகின் மிகச்சிறந்த
ஐந்து வெற்றித் திரைப்படங்களான
பாரதிராஜாவின் என்னுயிர்த் தோழன்,
ஆபாவாணனின் இணைந்த கைகள்,
ரஜனிகாந்தின் பணக்காரன்,
பாக்கியராஜின் பொண்ணு பார்க்கப்போறேன்,
கமல்ஹாசனின் இந்திரன் சந்திரன்

ஆகியவற்றின் திரையிடும் உரிமை எம்மிடம் உள்ளது. மொன்றியலுக்கும் ரொறன்ரோவுக்கும் தனித்தனியே திரையரங்கு வசதிகளும் எம்மால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தைப்பொங்கலை முன்னிட்டு 89ம் ஆண்டு சஞ்சிகைகளும் சங்கர் & கோ CD களும் மற்றைய CD களும் இசை நாடாக்களும் மிக மிக குறைந்த விலையில் விற்கப்படும்.

**JEYA AND BROTHERS**
GROCERY, VIDEO & AUDIO CASSETTE
**588 Parliament St. Toronto, Ont. M4X 1P8**
**Tel: (416)920-9226 / 920-0998 0r 960-9632**
**Fax: (416) 920-1089**

2.3



படிப்பகம்

www.padippakam.com

## EXECUTIVE Driving School




**WE TEACH AND TRAIN YOU BEST TO ENSURE YOU PASS DRIVING TEST**

SPECIAL A COMPLETE COURSE FOR.. **$299**

SATISFACTION GUARANTEED

COURSE FEE INCLUDES:
*26 HRS. OF IN-CLASSROOM SESSIONS
*14 TOP NOTCH DRIVING LESSONS(40 min)
*MORNING EVENING & SATURDAY CLASSROOM INSTRUCTIONS
*COURSE FEES TAX DEDUCTIBLE
*41% INSURANCE DISCOUNT
*MODERN AUTOMATIC AIRCONDITIONED CARS
*Ministry of Tansportation APPROVED COURSES
*PRIVATE LESSONS ALSO ($22 an hour)
*FREE HANDBOOK

METROWIDE PICK UP
7 DAYS A WEEK

**EXECUTIVE DRIVING SCHOOL**
1544 QUEEN ST,W
TORONTO,ONT.
588-8290

23.2

புதுப் பொலிவுடன் யாழ்நகர் ரேடர்ஸ்.
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

## யாழ் நகர் ரேடர்ஸ்

உங்களுக்கு தேவையான கிழக்கு மேற்கு இந்திய இலங்கை உணவுப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் மரக்கறி, தகரத்தில் அடைக்கப்பட்ட பழச்சாறுகள், சமையல் பாத்திரங்கள், புதிய,பழைய வீடியோ திரைப்படங்களை வாடகைக்கும் ஓடியோ கசற்றுக்கள் என்பவற்றை ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

☆ புடைவைகள் மற்றும் தங்க நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

☆ நகை திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

## YARLNAGAR TRADE'ARS

1239 எல்ஸ்மயர் வீதி
(மிட்லண்ட் & எல்ஸ்மயர்)

1239 ELLESMERE RD
(MIDLAND & ELLESMERE)
BIRKDALE PLAZA

**TEL:285-0587**

☆ A FRESH IDEA IN MARKETING EAST/WEST INDIAN ANDEEALAM GROCERIES, SPICES, CANNED VEGETABLES, CANNED FRUITS, JUICE AND MORE AT UNBEATABLE PRICES

☆ WE HAVE GREAT VARIETY OF OLD AND NEW VIDEO MOVIES AND SELL AUDIO CASSETTES, YOU CAN ALSO TRANSFER YOUR VIDEO CASSETTES IN 24 HOURS
NTSC<==> PAL

SEVEN DAYS A WEEK
MON-WED 11.00 AM - 10.00 PM
THURS - SUN 10.00 AM – 10.00 PM

யாழ்நகர்ரேடர்ஸுக்கு வேறு எந்த கிளை ஸ்தாபனங்களும் இல்லை.





23


## JAFFNA ELECTRONICS

2815 Eglinton Ave East,
Scarborough,Ont,
M1J 2E1
Phone:(416)267-6623

உங்களுக்குத் தேவையான
*தொலைக்காட்சிப் பெட்டிகள்
*வீடியோ சாதனங்கள்
*வீடியோ, ஓடியோ நாடாக்கள்
*ஸ்ரீறியோ ஒலிப்பதிவு சாதனங்கள்
*தொலைபேசிகள், பதில் அளிக்கும் இயந்திரங்கள்
*விளையாட்டுப் பொருட்கள்
*அன்பளிப்புப் பொருட்கள்
*மின் விசிறிகள், அலங்கார விளக்குகள்
*சுவர்க்கடிகாரங்கள்
மற்றும் அலங்காரப் பொருட்களை நியாயமான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள சிறந்த இடம்

எங்களிடம் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்களை (Audio, Video cassettes) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.






ஜஃப்னு எலக்ரோனிக்ஸ் லிமிட்டட்

# PHOENIX

## CAR AND TRUCK RENTALS



சொகுசுக்கார்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ள

FREE
LOCAL CUTOMER
PICK-UP & RETURN

பொருட்களை ஏற்றி இறக்க தேவையான வான்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

சகல கிறடிட் அட்டைகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

***GM* FORD*CHRYSLER*NISSAN**




MOVE-IT!
WITH OUR
CUBE VANS

VISA
MASTERCARD

186 Spadina Ave
Inside Mall,
Beside Golden Harvest Theatre

BUS:(416) 861–9353
Hand Held (416) 587–2311

186 ஸ்படைனு அவனியூ
கோல்டன் கார்வஸ்ட் தியேட்டருக்கு அருகில்

16.3



படிப்பகம்

www.padippakam.com

# பாலாஸ்

## 584 A பாராளுமன்ற வீதி



இலங்கையை நினைவூட்டும் வண்ணம் யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த நகைசெய்யும் வல்லுனர்களால் தயாரிக்கப்படும் நகைகளுக்கு ரொறன்ரோவில் முதலிடம்.விரும்பிய டிசைன்கள் நங்கையர் விரும்பும்நவநாகரிக விதவிதமானஆபரணங்கள் அனைத்திற்கும்சிறந்த ஒரே இடம்

நம்பிக்கை நாணயம் உத்தரவாதம் மற்றும்அசல் 22 கரட் தங்க,வைர ,வெள்ளி ஆபரணங்களையும் மற்றும் திருமண ருதுசாந்தி,பிறநத நாள் அன்பளிப்புகளையும் உங்கள் அழகை மேலும் மெருகூட்ட செய்யும் சிறந்த தயாரிப்புகளையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள சிறந்த இடம்

வியாபார நேரம்
திங்கள்-வெள்ளி 2.00–8.30
சனி-ஞாயிறு 10.00–8.30

ச க ல வ கை ய ா ன புடைவைகளும் விசேடமாக காஞ்சிபுரம், கூறை என்பன விற்பனைக்குண்டு.

கல்யாண வைபவங்களுக்குத் தேவையான தலைப்பாகை, ஒட்டியாணம் என்பவற்றை வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

## BALAS

584A Parlaiment St
(at Wellesley)
Toronto,Ont
(416) 924-7890

26.1

# R.P. எம்போரியம்

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 22 கரட் தங்க நகைகள்
வளையல்கள், நிச்சயதார்த்த மோதிரங்கள்,மல்லிகை, முத்து, பிரபா, தாலிக் கொடி

3852 Finch Ave East, Unit 10
Scarborough,Ont M1T 3T9
தொலைபேசி: 321 3743

சிறியோர் முதல் பெரியோர் வரையிலான ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஏற்ற நவநாகரீக ஆடைகள்



பழைய, புதிய பாடல்கள் அடங்கிய 500க்கு மேற்பட்ட ஒலிப்பதிவு நாடாக்கள், இசைத்தட்டுக்கள், CD இசைத்தட்டுக்களில் இருந்து உங்களுக்குப் பிடித்தமான பாடல்கள் தெரிவு செய்து ஒலிப்பதிவு செய்து தரப்படும்.

ஒலிப்பதிவு, வீடியோ ஒளிப்பதிவு
பழைய,புதிய தமிழ்,இந்தி,மலையாள வீடியோ திரைப்படங்கள், பாடல் கசட்டுக்கள்
NTSC<=>PAL வீடியோ மாற்றீடுகள்


ஏழு நாட்களும் திறந்திருக்கும்
காலை 10.00 -மாலை 10.00 மணி வரை

9.2

# T & T AUTOCARE

# T & T கார் பராமரிப்பு

தொலைபேசி: 289-0615



உங்கள் வாகனத்தில் உள்/வெளி பராமரிப்பு மற்றும் திருத்த் வேலைகள்

வாகனங்களை கூடிய விலக்கு விற்கவும் குறைந்த விலக்கு வாங்கவும்

Under $2000
1981 DODGE OMNI (Standard)
1979 PLYMOUTH HORIZON (Auto)
1982 Mercury LYNx (Auto)
Certified

1950 ELLESMERE RD #14.
SCARBOROUGH

9.2

வட அமெரிக்காவிலேயே மிகப் பெரிய இலங்கை உணவுப் பொருள் விற்பனை நிலையம்

# சிவாஸ்

## ரேடிங் கோ லிமிட்டட்

பொங்கலுக்கு தேவையான சகல பொருட்களும் மாவிலை, வாழையிலை, முடியுடன் கூடிய தேங்காய் என்பனவும் சரக்கு வகைகளும் மலிவாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கைக்கு பணம் அனுப்புவதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

திருமண வைபவங்களுக்கு தேவையான மணவறை, தலைப்பாகை, குத்துவிளக்கு போன்றவற்றை எம்மிடம் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்

## SIVA'S

Trading co Ltd

3852 Finch Avenue East,
Scarborough, Ont
M1T 3T9
தொலைபேசி: (416) 321-2739

இல்லத்தரசிகளின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே நிறுவனம்

போதிய வாகனத் தரிப்பு வசதிகள் உண்டு

# எஸ்.ஆர்.மீன் மார்க்கட்

சகல வகையான மீன்,நண்டு,இறால்,கணவாய் மற்றும் கடல் உணவு வகைகளுக்கும் சகல பலசரக்கு வகைகளுக்கும்

புதிய பழைய தமிழ் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள், CD இசைத்தட்டுக்கள் ஆகியவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்



வாடிக்கையாளர்களுக்கு எங்கள் மகத்தான பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## S.R.FISH MARKET

584 Parliament St
(at Wellesley)
TORONTO, ONT
தொலைபேசி: 416-975-1611

29.9



படிப்பகம்